அப்போலோ-10 விண்வெளி வீரர்கள் "சான்விச்சர்ஸ்" சாப்பிட்டார்கள்

Registered as a News paper in Ceylon விலை சதம் 15

★★

ஈழநாடு சந்தா

தினப் பதிப்பு

மூன்று மாதம் — ரூ. 18-00

ஆறு மாதம் — ரூ. 34-00

ஒரு வருடம் — ரூ. 66-00

ஈழநாடு

EELANADU

National Tamil Daily

தபாலபெட்டி எண்: 49

போன்: 389

மலர் 11

இதழ்: 98

தேசிய தினசரி

ஈழநாடு சந்தா

வாரப்பதிப்பு மாத்திரம்

மூன்று மாதம் — ரூ. 4-00

ஆறு மாதம் — ரூ. 7-50

ஒரு வருடம் — ரூ. 14-00

முற்பணம் கட்ட வேண்டும்

தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

யாழ்ப்பாணம் வைகாசி 7 ரபி; அவ் 3 செவ்வாய்க்கிழமை [20-5-69]

'தமிழ்ப்பிள்ளைகளின் போதனை மொழியைமாற்ற நியாயமில்லை'

3 பௌத்த பாடசாலைபற்றி பிரதமருடன் ஜி. ஜி. பேச்சு

கொழும்பு, திங்கள்

வட பகுதியிலுள்ள மூன்று பௌத்த பாடசாலைகளையும் அரசாங்கம் ஏற்று கொள்வது சம்பந்தமாக எழுந்துள்ள பிரச்னைகள் பற்றி யாழ்ப்பாணப் பிரதிநிதியும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவருமான திரு. ஜி. ஜி. பொன்னம்பலமும், உடுப்பிட்டிப் பிரதிநிதியும், உப-சபாநாயகருமான திரு. எம். சிவசிதம்பரமும் இன்று மாலை பிரதமர் திரு. டட்லி சேனநாயகாவைச் சந்தித்துப் பேசினர். சுமார் ஒன்றரை மணி நேரம் நீடித்த இப்பேச்சுவார்த்தைகளின்போது எந்தக் காரணத்தைக்கொண்டும் இந்த மூன்று பாடசாலைகளில் மட்டுமல்லாது தமிழ்ப் பிள்ளைகளுக்குத் தமிழ்மொழி மூலம் கல்வி கற்பிப்பதை மாற்றி, சிங்கள மொழி மூலம் கல்விப் போதனையளிப்பதற்கு எந்தவிதமான நியாயமுமில்லையென்பதையும், வடபகுதியில் குறிப்பிட்ட மூன்று பாடசாலைகளை அரசாங்கம் இப்போது எடுத்துக்கொள்வதற்கு எந்தவிதமான அவசியமுமில்லையென்பதையும் காங்கிரஸ் தலைவர்கள் பிரதமருக்கு விளக்கமாக எடுத்துக்கூறினராம்.

இந்தச் சந்திப்பின் பின்னர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் 'ஈழநாடு' பத்திரிகைக்கு விடுத்த ஓர் அறிக்கையில் தாங்கள் தெரிவித்த விளக்கங்களைப் பிரதமர் அரசாய்ந்து நல்லதொரு முடிவு எடுப்பதாக உறுதி கூறினார் என்று தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனை முறிந்து வீழ்ந்ததால்

6 வயதுக் குழந்தை ஸ்தலத்திலேயே மரணம்

யாழ்ப்பாணம், செவ். தனது பாட்டனுருடன் வெளியிலிருந்து காற்று வாங்கிக்கொண்டிருந்த 6 வயதுக் குழந்தையொன்று பனைமரம் முறிந்து வீழ்ந்ததால் மூளை சிதறி, ஸ்தலத்திலேயே துடிதுடித்து மரணமானது.

இந்தப் பரிதாபகரமான சம்பவம் நேற்று முன்தினம் மிரவ கரையூர் பொலிஸ் பகுதியிலுள்ள துண்டி என்ற இடத்தில் நடைபெற்றது.

மரணமான குழந்தையை மடியில் வைத்திருந்த குழந்தையின் பாட்டனுன வேலன் என்பவர் அபாயகரமான நிலையில் யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதுசம்பந்தமாக விசாரணை நடத்திய திரு என். இராசநாயகம், பனை விழுந்ததால் ஏற்பட்ட விபத்து மரணம் என்று தீர்ப்பளித்தார்

(கா. நி)

ரயிலில் மோதுண்டு மரணம்

இளங் கவிஞருக்கு

சுழிபுரம், திங்கள்

தொல்புரம் மாணவி தலியார் மடத்தில் ஓவ்வொரு நாளன் மாரின் குடு பூசையையும் விரிவாகக் கொண்டாட ஏற்பாடாகியுள்ளது.

வியாழக்கிழமை சந்திரனை நெருங்குவர்

கேப்கெல்லடி, மே 19 வானவெளியைக் கிழித்துக்கொண்டு அமெரிக்காவின் 'அப்போலோ-10' மணிக்கு 6000 கிலோ மீட்டர் வேகத்தில் சென்றுகொண்டிருக்கிறது.

விண்வெளி வீரர்கள் மூவரும் இன்று 'சான்விச்சர்ஸ்' சாப்பிட்டார்கள். முன்னைய விண்வெளிக்கலங்களில் பயணம் செய்த விண்வெளி வீரர்களுக்கு கொடுக்கப்பட்ட உணவுபோன்றில்லாமல் புதுவகையான முறையில் இந்த விண்வெளிக்கலத்தில் பயணம்செய்யும் வீரர்களுக்கு உணவுகொடுக்கப்பட்டுள்ளது. 'சான்விச்சர்ஸ்லில்' ஒரளவு தண்ணீரைக் கலந்துகொண்டால், ஸ்பூனில் இந்த 'சான்விச்சர்ஸ்' ஒட்டிக்கொள்ளும். மூவரும் உற்சாகமாகவும் காணப்பட்டார்கள்.

வருகிற வியாழக்கிழமை சந்திரனுக்கு சமீபத்தில் சென்றுஇரு விண்வெளிவீரர்கள் துணை ராக்கெட்டில்பிரிந்து சென்று சந்திரனைவெகு சமீபத்தில் சுற்றி இறங்குவதற்குத்தகுதியான இடத்தை தேர்ந்தெடுப்பார்கள்.

ஜூலை 16ந் திகதி சந்திரனில் மனிதனை இறக்குவதற்கான 'அப்போலோ-11' செல்வதற்கான இறுதி ஒத்திகையாக 'அப்போலோ-10'ன் அனுபவம் அமையும்.

(விபரம் 3ம் பக்கம்)

மலேஷியா-சிங்கப்பூர் உறவு முறியும்?

அலோர்ஸ்டா, மே 19

மலேஷியாவிற்கும் சிங்கப்பூருக்குமிடையில் உள்ள உறவு முறியுமா என்ற கேள்வி தற்பொழுது எழுந்துள்ளது. மலேஷியா உள் நாட்டு விவகாரங்களில் சிங்கப்பூர் அரசாங்கம் தலையிடுவதை நிரூபிக்க தேசிய தலைவரான துன்டான் சியூசின், தயாராக இருப்பதாக மலாக்காவில் தெரிவிப்பதைத் தொடர்ந்து இந்தக் கேள்விக் குறி எழுந்துள்ளது.

மலேஷியாவின் உள் நாட்டு விவகாரங்களில் சிங்கப்பூர் அரசாங்கம் தலையிடுவதாக குற்றஞ்சாட்டப்படுவதை மறுத்து சிங்கப்பூர் அரசாங்கம் குறிப்பு அனுப்பியிருந்தது. இந்தக் குறிப்பிற்கு பதில் அனுப்பி விட்டதாக மலேஷியப் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் தெரிவித்துள்ளார். பதில் குறிப்பில் அடங்கியுள்ள விபரங்களை வெளியிட அவர் மறுத்துவிட்டார்.

சிங்கப்பூரிலுள்ள மலேஷியத் தூதர் டான்யூ ஜூமால் பின் அப்துல்லத்திப் மலேஷியப் பிரதமர் துங்குவை இங்கு சந்தித்தார். சிங்கப்பூர் வெளியுறவு அமைச்சின் குறிப்பு சம்பந்தமாகவே இச்சந்திப்பு நடந்தது.

துணைப்பிரதமரிடம் மலேஷிய நிர்வாகம் கையளிப்பு

கோலாலம்பூர், மே 91

மலேஷியப் பிரதமர் திரு துங்கு அப்துல் ரஹ்மான் நாட்டின் நிர்வாகப் பொறுப்பை தற்காலிகமாக துணை பிரதம மந்திரி இரு. துன் அப்துல் ரசாக்கிடம் ஒப்படைத்துள்ளதாக ஆஸ்திரேலிய வானொலி அறிவித்தது நாட்டின் நிலைமை சீரானதும் தாம் நிர்வாகப் பொறுப்பை ஏற்கவிருப்பதாக துங்கு அப்துல் ரஹ்மான் நாட்டு மக்களுக்கு அறிவித்ததாகவும் அச் வந்த கலவரம் தணிந்துள்ளதாகவும், விரைவில் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படும் என்றும் கூறப்பட்டது.

பல இன மக்கள் ஒற்றுமையாக வாழ்ந்துவந்த மலேஷியாவின் சொருபம் சிதைக்கப்பட்டுவிட்டதாக துணைப் பிரதமர் கூறியுள்ளார்.

கோலாலம்பூரில் நாளை ஏழரை மணித்தியாலம் அவசரகாலச்சட்டம் தளர்த்தப்பட்டுள்ளது. மலாக்காவில் நிலைப்புச் சம்பவங்கள்

போதனைமொழி தமிழாக இருக்க வேண்டும்

யாழ்ப்பாணம், செவ்வாய் கடந்த காலத்தில் தமிழர்கள் கல்வியின பயனுலதான் முன்னணியில் திகழ்ந்தார்கள் கல்வித்துறையில் பின் தங்கிய சிறுபான்மை சமூகத்திற்கு அரசாங்கம் கல்வி வசதியளிப்பதை யாரும் தடுக்கக் கூடாது பௌத்தபாட சாலைகளில் தமிழ்தான் போதனை மொழியாக இருக்க மேண்டும் என்று அரசாங்கத்திடம் கோரவேண்டும்.

வடமராட்சி ஆலயப்பிரவேச குழு அமைப்பாளர் திரு. க. விவேகானந்தன் வடபகுதி பௌத்தபாட சாலைகள் பற்றி மேற்கண்ட கருத்தை தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

ஏற்கனவே தமிழர்கள் கல்வியில் முன்னேறிவிட

ரயிலில் மோதுண்டு மரணம்

இளங் கவிஞருக்கு நேர்ந்த பரிதாபம்

யாழ்ப்பாணம், செவ்வாய் நள்ளிரவு நேரம் மதுபோதையில் ரயில்பாதையைக் கடக்க முயன்ற இளம் கவிஞர் ஒருவர் ரயிலினால் மோதுண்டு உருச்சிதைந்த நிலையில் மரணமாகிக் கிடக்கக் காணப்பட்டார். இந்தச் சம்பவம் அரியாலைப் புகையிரதப் பாதையில் நேற்று முன்தினமிரவு நடைபெற்றது.

யாழ்ப்பாணம் ஓட்டுமடத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட ராஜேந்திரா என்பவரே இவ்வாறு மரணமானவராவார். இதுசம்பந்தமான மரணவிசாரணை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் நடைபெற்றது.

விசாரணையில் பின்வரும் தகவல்கள் சாட்சியங்கள் மூலம் தெரியவந்தன. மரணமானவரின் மனைவி ஏற்கனவேயே திருமணமாகி பெண்குழந்தைகளுக்குத் தாயானவர். இப் பெண்குழந்தையில் ஒன்று சம்பவம் நடந்த அன்று மரணமானது.

அக்குழந்தையை அடக்கம்செய்துவிட்டு அந்தத்துக்கம் தாளாததால் இராஜேந்திரா மது அருந்திவிட்டு இடியப்பமும், பணிசும்பார்சலாகக் கட்டிக் கொண்டு அவரது சகோதரி வீட்டுக்கு இரவு 11-30 மணிக்கு செல்கையில் ரயிலினால் மோதுண்டார்.

புங்கங்குளம் ரயில் நிலையத்துக்கும், ஆனந்தன் வடலி வீதிக்குமிடையில் காலஞ்சென்றவர் ரயிலுடன் மோதுண்டதாக புகையிரதச் சாரதி தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த கான்ஸ்டபிள் என். ஈ. இரத்தினம் சாட்சிகளை ஆஜர் செய்திருந்தார். திரு. என் இராசநாயகம் மரண விசாரணை நடத்தினார்.

(கா. நி)

நடுச்சாமம் கைதானவர்

12 தடவைகள் சிறை சென்றவராம்

யாழ்ப்பாணம், செவ். நடுச் சாமத்தில் வீட்டுப் படலைகளில் சந்தேகமான நடமாட்டத்தில் காணப்பட்ட ஒருவரை பொலிஸார் கைது செய்தபோது அவர் ஏற்கனவே 12 தடவைகள் சிறைவாசம் செய்தவரென்பது தெரிய வந்தது.

இந்தச் சம்பவம் நல்லூரில் இரண்டாம் குறுக்கு வீதியில் கடந்த நளளிரவு 2-30 மணிக்கு நடைபெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர். வட்டுக்கோட்டையைச் சேர்ந்த ரி. தெய்வேந்திரம் என்ற சந்தேக நபரை பொலிஸ் கான்ஸ்டபிள்களான என். ஈ. இரத்தினமும், டபிள்யூ. வால்ட்டரும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர் சந்தேகமான முறையில் குறிப்பிட்ட வீதியிலுள்ள வீடொன்றின் படலையில் நடமாடியதாகவும், திடீரென வீட்டிற்குள் சென்று விட்டுத் திரும்பி வருகையில் கைதானதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறிப்பிட்ட வீட்டிற்குள் மாங்காய் விழுந்த சப்தம் கேட்டு மாங்காயை எடுக்க வென தான் உள்ளே சென்றதாகவும், ஆனால் நாட்துரத்தியதால் தான் வெளியே வந்ததாகவும் சந்தேகநபர் தெரிவித்ததால் குறிப்பிட்ட வீட்டுக்குப் பொலிஸார் சென்று பார்த்தபோது அங்கு மாமரம் எதுவும் காணப்படவில்லையென்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதானவர் ஏற்கனவே 12 தடவைகள் சிறை சென்றவர் என்றும் பொலிஸ் விசாரணையில் தெரிய வந்தது. பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருக்கும் இவர் யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில். ஆஜர் செய்யப்படவிருக்கிறார்.

(கா. நி)

ஔவை துரைசாமி நாளையாழ்ப்பாணம்வருகிறார்

யாழ்ப்பாணம், செவ்வாய் சென்னை சித்தாந்த கலாநிதி, உரைவேந்தர், பேராசிரியர் ஔவை சு. துரைச்சாமி நாளை புதன்கிழமை விமானமூலம் யாழ்ப்பாணம் வருகின்றார்.

வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகும் சேக்கிழார்விழாவிலும், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையின் ஆதரவில் சொற்பொழிவுகள் ஆற்றவுமெனவுமே ஔவை துரைச்சாமி யாழ்ப்பாணம் வருகின்றார்.

நாளைக் காலை 11-20 மணிக்கு பலாலி விமான நிலையத்தை வந்தடையும் போது சேக்கிழார் மன்றத்தினரும், ஆறுமுகநாவலர் சபையினதும் உறுப்பினர்கள் திரு. எம். ஸ்ரீகாந்தா தலைமையில் இவரை வரவேற்பார்கள்.

ஔவை சு. துரைச்சாமி தனது முதலாவது நிகழ்ச்சியாக நாளை மாலை 6 மணிக்கு யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி மண்டபத்தில் ''நல்லை நகர் நாவலர்'' என்னும் பொருள் பற்றிச் சொற்பொழிவாற்றுவார். 22-ம், 23-ம் திகதிகளில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் நடைபெறும் சேக்கிழார் விழாவிலும் இவரது சிறப்புச் சொற்பொழிவுகள் இடம்பெறும். (கா நி.)

'ஈழநாடு 10-வது ஆண்டு விழா'

கரபந்தாட்டச் சுற்றுப்போட்டி

விண்ணப்பம் ஜூன் 5 வரை அனுப்பலாம்

யாழ்ப்பாணம், செவ். ஈழநாடு பத்தாவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடைபெறவிருக்கும் பல்வேறுவிதமான விளையாட்டுப் போட்டிகளிலும் கரபந்தாட்டப் போட்டியும் மிக முக்கியமான தொன்றாக இடம்பெறவிருக்கின்றது.

கரபந்தாட்டத்தின் இறுதிச் சுற்றுப் போட்டிகள் அடுத்த மாதம் 12-ம், 13-ம் 14-ம் திகதிகளில் நடைபெறும் 10-வது ஆண்டு விழா நாட்களை ஒட்டி நடைபெறும். இக்கரபந்தாட்டச் சுற்றுப் போட்டி (ஓவர் கேம்)க்கான விண்ணப்பங்கள் இப்போது விளையாட்டுக்கழகங்களிடமிருந்து கோரப்பட்டுள்ளன. இதற்கான விண்ணப்பங்கள் அடுத்த மாதம் 5-ம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படவிருக்கின்றன.

வெற்றியீட்டும் கழகங்களுக்கு ஈழநாடு விழாவில் வைத்து உயர்ந்த பரிசில்கள் வழங்கப்படும். பரிசில்கள் பற்றிய விபரங்கள் காலக்கிரமத்தில் ஈழநாட்டில் பிரசுரமாகும்.

விண்ணப்பங்கள் யாவும் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதியிலுள்ள ஈழநாடு காரியாலயத்துக்கு விலாசமிட்டு அனுப்பப்பட வேண்டும்.

உதைபந்தாட்டம், தாச்சிப்போட்டி, சைக்கிளோட்டம் ஆகியன உட்படமற்றைய போட்டிகள் பற்றிய விபரங்களும், போட்டி விதிகளும் தொடர்ந்து ஈழநாடு பத்திரிகையில் வெளிவரும்.

(கா. நி)

தமிழ்ப் பள்ளிகளை மூடுவது மலேஷிய நிலைமை

அமைதி நிலவுகிறது

பள்ளிகள் திறக்கப்பட்டன

கோலாலம்பூர், மே 19 மலேஷியாவில் 5 நாள்களுக்குப்பிறகு நேற்று அமைதி நிலவியது. தலைநகரில் மூடப்பட்டபாடசாலைகள் இப்போது மீண்டும் திறக்கப்பட்டுள்ளன. மாணவர்கள் பள்ளிக்குச் செல்லத்தொடங்கியுள்ளனர்.

தொழிற்சாலைகள் மீண்டும் செயல்பட ஆரம்பித்துள்ளன. குழப்பம் விளைவிப்போர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென உயர் தேசிய நடவடிக்கை சபைத் தலைவரான துணைப் பிரதமர் துன் அப்துல் ரஸ்லாக் மீண்டும் எச்சரித்துள்ளார்.

இனக்கலவரத்தின் போது மாண்டவர்தொகை 137 என தர்ப்பத்தில் பிரதமர் சுட்டிக் காட்டிய போது இந்த இரண்டு அம்சங்களும் குறிப்பிட்ட மூன்று பாடசாலைகள் சம்பந்தப்பட்ட விஷயத்தில் பொருந்தவில்லையென திரு. ஜீ. ஜீ. யும் திரு. சிவசிதம்பரமும் எடுத்துக் காட்டினர்.

இதர பாடசாலைகளில் ஹரிஜன பிள்ளைகள் பாரு பாடாக நடத்தப்படுவதாகவும் அங்கு இடமளிக்கப்படுவதில்லையெனவும் புகார் வந்திருப்பதாகப் பிரதமர் கூறியதையும் காங்கிரஸ் தலைவர்கள் மறுத்தனர். இதற்கு ஆதாரமில்லையென்றும் அவர்கள் தெரிவித்தனர்.

தமிழ்ப் பிள்ளைகளின் போதனை மொழியில் மாற்றம் செய்வதற்கு எவ்வித நியாயமுமில்லையென பிரதமருக்கு எடுத்துக் காட்டிய திரு. ஜீ. ஜீ. இந்தப் பிரச்னையில், இந்துக்கள் வணக்கம் செலுத்தும் புத்த சமயத்தைக் கலந்து நிலைமையைக் குழப்புவதற்கு இடமளிக்க வேண்டாமென்றும் கேட்டுக் கொண்டார்.

கோலாலம்பூரில் நாளை ஏழரை மணித்தியாலம் அவசரகாலச்சட்டம் தளர்த்தப்பட்டுள்ளது. மலாக்காவில் தீவைப்புச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. சிவில் சேவையிலுள்ள ஊழியர்களை வேலைக்குத் திரும்பும் படி வானொலி மூலம் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

'வடபகுதி பௌத்த பாடசாலைகளில்

சிங்களம் பௌத்தம் பயில மாணவர்களுக்குஉதவுவோம்'

சிறுபான்மைதமிழர்தூதுகோஷ்டியிடம் வண. நாரத உறுதி

கொழும்பு, செவ்வாய் சிங்கள மொழியையும், பௌத்த சமயத்தையும், வடபகுதியிலுள்ள தமிழ் பௌத்த பாடசாலை மாணவர்கள் பயில்வதற்கான சகல உதவிகளையும் செய்வதாக கரவெட்டியில் தமிழ் பௌத்த பாடசாலையை நிறுவிய வண. நாரததேரோ ஐந்துபேர் அடங்கிய சிறுபான்மைதமிழர் தூதுகோஷ்டியிடம் வாக்குறுதியளித்தார்.

திரு. எம். வைரமுத்து தலைமையில் சென்ற இத் தூதுகோஷ்டியில், தமிழ் பௌத்த பாடசாலை அதிபர்களில் ஒருவரான திரு. கே. இராசரத்தினமும் சென்றிருந்தார்.

தென் இலங்கையில் உள்ள சிங்கள பௌத்தர்கள் மட்டுமன்றி, வடக்கில் உள்ள இந்துக்களும், தமிழ் பௌத்தர்களுக்கு நிதிஉதவியும், பொருளுதவியும் அளித்திருப்பதாக தூதுகோஷ்டி தெரிவித்தது.

தமிழ் மக்களில் ஒருபகுதியினருக்கு அடிப்படை மனித உரிமை வழங்க மறுக்கும் தமிழரசுக்கட்சியினரை இந்த இரு சமூகத்தவர்களும் எதிர்க்கின்றனர் என்றும் தூதுகோஷ்டியினர் மேலும் தெரிவித்தனர்.

தமிழ்மொழியில் அதிகமான பௌத்த இலக்கியங்கள் உடனடியாகத் தேவைப்படுவதாகவும், தமிழ்மொழியில் பாண்டித்தியம் பெற்ற பௌத்த பிக்குகளை சிறுபான்மை சமூக பிள்ளைகளுக்கு பௌத்த சமயம் போதிக்க அனுப்புமாறும் தூதுகோஷ்டி வண. நாரத தேரோவைக் கேட்டுக் கொண்டது.

மாதகல் கலவரத்தில் மூவர் காயமடைந்தனர்

யாழ்ப்பாணம், செவ்.

மாதகலிலுள்ள கோடாலிக்காடு என்ற இடத்தில் இருபிரிவினருக்கு இடையே நடந்த கலவரத்தில் ஒரு பெண் உட்பட மூவர் காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இக்கலவரத்தின்போது சில தோட்டங்களும் சேதப்படுத்தப்பட்டதாகவும்கூறப்படுகிறது.

இன்று

யாழ்ப்பாணம், செவ்.

இன்று மாலை கயப்பாக்கம் சோமசுந்தரம் செட்டியார் 'முருகப் பெருமான் திருவவதாரமும் திருவிளையாடலும்' என்னும் பொருள் பற்றி நாவலர் பாடசாலை மண்டபத்தில் உரைநிகழ்த்துவார். பார்வதி திருக்கல்யாண இன்றைய நிகழ்ச்சியை 'மில்க் வைற் சோப்' தொழிற்சாலை உரிமைமாளர் நடத்துகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரிவிளம்பரம்

தவறிவிட்டது

9 கூப்பன் புத்தகங்கள் அத்தியடி சங்கக்கடையடியில் தவறிவிட்டன. எங்கா வது இவற்றைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உடனடியாக 'ஈழநாடு' காரியாலயத்தில் அல்லது நேரில் ஒப்படைக்கவும். உரிய சன்மானம் வழங்கப் படும். செல்லையா செந்தில் நாதன், 6, புதுரோட், அத்தியடி, யாழ்ப்பாணம்.

1133

தேவை

யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள தியேட்டருக்கு ஒரு புக்கிங் கிளார்க், ஒரு ஒப்பு நோற்றர் தேவை. பிரீமப் பணம் ரூபா 1500/-. நல்ல சம்பளம் கொடுக்கப்படும். விளம்பர இல. 1129 C/o 'ஈழநாடு', யாழ்ப்பாணம்.

1129

கூட்டுறவுப் பயிற்சி பெற்ற மனேச்சர் சம்பளம் தராதரத்தைப் பொறுத்து ரூபா 100/- துவக்கம் ரூபா 150/- வரை. கரம்பொன் பல நோக்கக் கூட்டுறவுச் சங்கம், கரம்பொன், ஊர்காவற்றுறை. தலைவருக்கு விண்ணப்பிக்கவும்.

1130

கடைதல் இயந்திரத்தில் (Lathe) வேலை செய்யக் கூடிய ஒருவரும் பித்தளை அல்மோனியம் வார்ப்பு வேலை தெரிந்த ஒருவரும் தேவை. இரு பகுதி வேலையும் தெரிந்த ஒருவருக்கு விசேட சலுகை உண்டு. வேலழகன் தொழிற்சாலை, சுன்னாகம்.

1134

கல்வி

மாணவர்கள் வீடுகளில் விஞ்ஞான பாடங்கள் போதிக்கப்படுகின்றன. ஐக்கிய கலாசாலை107, பருத்தித் துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

1136

விற்பனைக்கு

ஐந்தரை சாண் உயரமுள்ள 19 மாசமான, வெண்கல மயிலை நாம்பனும் இரு பசுக்களும் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: மரியாம்பிள்ளை, கச்சாய் வேதக் கோவிலடி, கொடிகாமம்.

1137

கடைக்கட்டிடம்:

மீன் சந்தைக்கு முன் வடிகால்வாய்க்கு மேலுள்ள கடைக் கட்டிடம் விற்பனைக்குண்டு. (ஆயிரம் இந்தியா ஓடுகள், மரங்கள், கதவு நிலைகள், யன்னல்கள்) விபரங்களுக்கு: S. R. தனியசிங்கம், அனுப்பப்படும்.

1018

கூட்டுறவு வைத்திய சாலைச் சங்கம், மூளாய் சுழிபுரம்

மேற்படி வைத்தியசாலையில் இருந்து இளைப்பாறுகின்ற டாக்டர் க. செல்வத்துரை அவர்களுக்கு ஒரு பிரியாவிடை நடாத்த இருப்பதால் அங்கத்தவர்கள் அனைவரையும் தங்களால் இயன்ற பொருளுதவியை 1969-ம் ஆண்டு அனி மீ 5 ந் திகதிக்கு முன் கௌரவ தனுதிகாரிக்கு அனுப்பி வைத்து இவ் வைபவத்தில் பங்கு பற்றும்வண்ணம் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

1578 தலைவர்.

SITUATION WANTED

Honest, Hardworking well Experienced accounts clerk. Double entry system. and with knowledge of booking, checking and other jobs associated withthe cinema seeks immediate employment.

1135, C/o, Eelanadu, Jaffna.

1135

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

செவ்வாய் 20—5—69

(செய்திகள் காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ அன் 61 மீ

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன் 61 மீ

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 திரைகானம், 1-00 மாதர்கேட்டவை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன் 49 மீ

மாலை 4-25 செய்திச் சுருக்கம், 4-28 அறிவிப்பு, 4-30 கல்விஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்தநாள் வாழ்த்துக்கள், 5-15 சிறுவர்கீதம், 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 பாமாலை, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 வயலினிசை, 7-35 குங்குமம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 வாத்தியஇசை, 9-30 கதைகதிரை 10-30

"நாட்டில் சிறந்த கோஷ்டியை யாழ். நகரில் உருவாக்கலாம்"

அகில இலங்கை உதைபந்தாட்ட பயிற்சியாளர் பேட்டி

— நமது விளையாட்டு நிருபர் 'தேவா' —

யாழ்ப்பாணம், செவ்.

யாழ். மாவட்டத் திலுள்ள விளையாட்டுச் சங்கங்கள் விளையாட்டுக் கழகங்கள், கல்லூரிகள் அனைத்தும் ஒற்றுமையாக ஒன்று பட்டு யாழ் உதைபந்தாட்டத்தின் வளர்ச்சிக்கு பாடுபடுமென்பதால் இலங்கையிலேயே மிகச்சிறந்த ஒரு உதைபந்தாட்டக் கோஷ்டியை யாழ் நகரில் உருவாக்க முடியும் என்பதே எனது உறுதியான நம்பிக்கை.'

இவ்வாறு அகில இலங்கை பாடசாலை உதைபந்தாட்டப்பயிற்சியாளர் திரு அல்பட் பொஞ்ஞோ யாழ் வாடிவீட்டில் வைத்து எமது நிருபருக்கு அளித்த விசேஷ பேட்டியின்போது கூறினார்.

அவர் தமது பேட்டியின் போது மேலும் கூறியதாவது:

"நான் யாழ்ப்பாணத்திற்கு 15 அல்லது 20 முறை உதைபந்தாட்டப் பயிற்சி அளிப்பதற்காக வந்திருக்கிறேன். கூடுதலாக யாழ் மாவட்டத்திலுள்ள பாடசாலை வீரர்களுக்கே பயிற்சி அளித்திருக்கிறேன். ஆனால் இம்முறைதான் முதன்முதலாக யாழ் உதைபந்தாட்டச் சங்கத்தின் அழைப்பின் பேரில் இங்கு வந்து கழக வீரர்களுக்கு பயிற்சி அளித்துள்ளேன்.

நான் சென்ற பலமுறை இங்கு வந்திருந்ததை விட யாழ் உதைபந்தாட்டத்தின் தரம் இம்முறைதான் மிகவும் வளர்ச்சியடைந்திருக்கின்றது. அதுவும் பாடசாலை வீரர்களின் விளையாட்டே கூடுதலாக வளர்ச்சி அடைந்திருப்பதை காணும்போது நான்மிகவும் சந்தோஷமடைந்தேன். யாழ் மாவட்ட பாடசாலை வீரர்களின் தரம் மிகவும் உயர்ந்துள்ளது என்பதற்கு உதாரணமாக இம்முறை விளையாட்டமைச்சின ஆதரவுடன் இந்தியாவுக்குச் சென்று வெற்றிவாகை சூடிய இலங்கைப் பாடசாலை இளைஞர் உதைபந்தாட்டத் தெரிவுக் கோஷ்டியில் யாழ் மாவட்டத்திலிருந்து மூன்று வீரர்கள் அங்கம் வகித்தார்கள்.

இதன்பின் பாங்கொக் சென்ற இலங்கை இளைஞர் உதைபந்தாட்ட தெரிவுக் கோஷ்டியிலும் இரண்டு வீரர்கள் அங்கம் வகித்திருந்தனர்.

பாங்கொக்சென்ற இரண்டு வீரர்களும் யாழ்ப்பாணக் கல்லூரி மாணவரான செல்வன் பிரான்சிஸ் பாங்கொக் வாய்ந்த கோஷ்டியை அங்கு உருவாக்கி வருகின்றேன். எனது இந்த ஆராய்ச்சி வருங்காலத்தில் உலகில் முன்னணிவகிக்கும் என்பது திண்ணம்". (தே. நி)

இன்றைய பலன்

சௌமிய வருடம்

20-5-69

செவ்வாய்க்கிழமை

வைகாசி 7-ந் திகதி

திதி- சதுர்த்தி இரவு 9-03 மேல் பஞ்சமி.

நட்சத்திரம்- திருவாதிரை பகல் 12-55 மேல் புனர்பூசம்.

ராகுகாலம் 2-53 — 4-23.

சுபநேரம்- 10-23 - 11-53.

இன்று பிறந்தவர்களுக்கு இவ்வாண்டு தூரத்துச் செய்தி துயரைக் கொடுக்கும். களஸ்திரமாகாத கன்னிப் பெண்களுக்கு இவ்வாண்டு களஸ்திரத்தை கொடுக்கும். எண்ணிய கருமம் கைகூடும். கண் நோய் குஷ்டம்கவலையும்மாறும். விவசாயிகளுக்கு இவ்வாண்டு நற்பலனைக் கொடுக்கும் பிறப்பான ஆண்டாகும்.

மேஷம்- பொருள்வரவு புகழ்படவாழ்வீர்.

ரிஷிபம்- கண்துடைப்பு வேலை, கவனம் வேண்டும்.

மிதுனம்- இன்சொல் இயம்புதல், இனசனமகிழ்ச்சி.

கடகம்- தேனுனவாழ்வு தேடியது கிடைக்கும்.

சிம்மம்- தற்பெருமை தடுமாறறம் உண்டு.

கன்னி- வாகன நலன், வரவும் பெருகும்.

வெற்றி தோல்வி இல்லை

யாழ்ப்பாணம், செவ். கந்தர்மடம் ருவின்ஸ்வின் விளையாட்டுக்கழகத்திற்கும் முத்திரைச்சந்தை ரேயல் விளையாட்டுக் கழகத்திற்கு மிடையே நடைபெற்ற சிநேகபூர்வமான மென்பந்துக் கிரிக்கெட் போட்டி வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது. (கா. நி)

நெயின்போஸ் வெற்றி

வல்வெட்டித்துறை, திங்கள் வல்வை ஹேர்லி நண்பர்களால் நடத்தப்பெற்ற 20 வயதுக்குட்பட்டவர்களிடையேயான கைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி நேற்றுக் கடைசியாக நடைபெற்றது. வல்வை நெயின்போஸ் கழகத்திற்கும்-வல்வை உதயசூரியன் கழகத்திற்குமிடையே நடைபெற்ற போட்டியில் முறையே 15:8, 15:9 புள்ளிகளைப் பெற்றுப் போட்டியை நெயின்போஸ் வெற்றியீட்டியது.

முன்னாள் பட்டிணசபை உறுப்பினர் திரு. பி.வேலும் மயிலும் தலைமையில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. கே. தேவசிகாமணி மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

விளையாட்டு விழா

அளவெட்டி, திங்கள் அளவெட்டி போயிட்டியில் மாபெரும் விளையாட்டு விழா ஒன்று அடுத்தமாதம் நிகழவிருக்கிறது. போயிட்டி மகாஜன விளையாட்டுக் கழக 2-வது ஆண்டு விழாவை யொட்டி நடாத்தப்படும் இவ்விளையாட்டு விழாவில் 25 மைல் சைக்கிள் ஓட்டம், கயிறு இழுத்தல், தாச்சி விளையாட்டு உட்பட மற்றும் பல விளையாட்டுக்களும் நடைபெறும். விண்ணப்பங்கள் இம்மாதம் 25-ம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்

இசைவிழா இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், செவ். மும்மூர்த்திகள் இசைமன்ற ஆதரவில் திருநெல்வேலி அம்மன் சிவன் வீதியில் நடைபெற்று வரும் இசைவிழாவின் இன்றைய நிகழ்ச்சிகள் வழக்கறிஞர் திரு. ச. ஸ்ரீநிவாஸன் தலைமையில்நடைபெறும். நிகழ்ச்சிகள் லிபரம்:-

6 மணி: கணேசன் கோஷ்டியினரின் நாதஸ்வரம்

7 மணி: மும்மூர்த்திஇசைமன்ற மாணவர்கள் பாட்டு

7-15 மணி: மும்மூர்த்தி இசைமன்ற மாணவர் மிருதங்கம்.

7-30 மணி: திருமதி எம். விசாலாட்சி பாட்டு.

8-30 மணி: ஆர். சரோஜினிதேவி பாட்டு.

9-30 மணி: ஊரிக்காடு ஏ. நடராஜா பாட்டு

10-30 மணி; சங்கீத கலாநிதி, சங்கீத பூஷணம், ரிகி. ராசலிங்கம் பாட்டு.

11-30 மணி; அரியாலைச் சகோதரர்கள் பாட்டு.

(கா. நி)

கண் நோயாளர் அதிகமாம்

அராலி, திங்கள் வலி. மேற்கு ப. நோ. கூ. ச. சமாச மண்டபத்தில் சென்ற ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் கண்நோயாளரைப் பரிசோதித்த டாக்டர் ஆனந்தராஜன், இப்பகுதியில் கண் நோயாளர் பலர் இருப்பதாகவும் ஆலல் இவர்களின் நோய்களுக்கு உரிய காலத்தில் சிகிச்சை அளிக்கப்பட்டால் இவர்களின் பார்வை குன்றுதுகாப்பாற் றலாமெனவும் சொன்னார்.

புரியாத மொழி இவரையும் விடவில்லை

யாழ்ப்பாணம், செவ். தவிச்சிங்களத்தில் சாட்சியங்களையும், புகார்களையும் பொலிஸ் கான்ஸ்டபிள்கள் சிலர் பதிவு செய்வதால் ஏற்படும் கஷ்டமான நிலைமையை,யாழ்ப்பாணம்பொலிஸ் நிலையத்திலுள்ள பொலிஸ் அதிகாரிகளும்கூஇடப்போது அனுபவிக்க வேண்டிய நிர்க்கதிக்குள்ளாகியுள்ளனர்.

இதனால் இங்குள்ள தமிழ் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர், சிங்களத்தில் பதிவு செய்யப்பட்ட சாட்சியம் ஒன்றை வாசித்து தெரிந்து கொள்ள சுமார 4 மணி நேரம் சிங்களம் வாசிக்க தெரிந்த தமிழ் பொலிஸாரையும் தமிழ் தெரிந்த சிங்களப் பொலிசாரையும் தேடி அலைந்தும் அது முடியாமல் போய்விட்டதாம்.

மண்டைதீவில்நடந்ததிடீர் மரணம் ஒன்றை விசாரணை செய்ய அனுப்பப்பட்ட சிங்கள பொலிஸ் கான்ஸ்டபிள் சிங்களம் தவிர வேறு எந்தப் பாஷையும் எழுதவோ, பேசவோதெரியாதவர் என்பதேஇதற்கு காரணம்எனப் பின்னர்தான் குறிப்பிட்ட சார்ஜன்டுக்குத் தெரியவந்தது. (கா. நி)

கூப்பன்கள் யாருடையது?

யாழ்ப்பாணம், செவ். யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் 6 பங்கீட்டு அரிசிப் புத்தகங்களை வட்டுக்கோட்டையைச் சேர்ந்த திரு. ஆ. பாலசுப்பிரமணியம் கண்டெடுத்து 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் பெற்றுக்கொள்ளலாம்.

ஆண்டு விழாவும் பொருட்காட்சியும்

யாழ்ப்பாணம், திங்கள் இலங்கை கயரோக நிவாரண தேசிய சங்க வலி-மேற்குக் கிளை 12-வது ஆண்டு விழாவைக் கொண்டாடுகின்றது. இதையொட்டி மாணவரிடையே கயரோகம் சம்பந்தமான கட்டுரை சித்திரம் முதலிய பல்வேறுதுறைகளில் போட்டிகளை நடத்துகிறது. இவ்வரிசையில் கயரோக அறிவு எழுத்துப் போட்டி இன்று ஆரம்பமாகிறது. பொருட்காட்சியும் நடைபெறவிருக்கிறது. இம்மாதம் 22-ந் திகதி தொடக்கம் 3 தினங்கள் நடைபெறும் இப்பொருட்காட்சி பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் இடம்பெறும். 23-ந் திகதி பிற்பகல் கயரோகப் பிரசாரப் படையினரின் அணிவகுப்பு நடைபெறும்.

விண்வெளியில் ரஷ்யாசாதனை

மாஸ்கோ, மே 19

ரஷ்யா அனுப்பிய 'வீனஸ் 6' என்ற விண்வெளிக் கப்பல் சுக்கிரகிரகத்தைசென்றடைந்தது. மற்றொருவின் வெக்கலமான 'வீனஸ்5' சுக்கிரனை ஏற்கனவே அடைந்து விட்டது.

'வீனஸ் 6, ஜனவரி 10 ல் அனுப்பப்பட்டது. 21 கோடி மைல் பயணம் செய்து சுக்கிரனை அடைந்ததாக 'டாஸ்' தெரிவித்தது.

விண்வெளி ஆராய்ச்சியில் இவ் விரு விண்வெளிக்கப்பல்களும் ரஷ்யாவுக்கு ஒருபுதிய மகத்தான சாதனையைத் தேடித் தந்திருப்பதாக 'டாஸ்' தெரிவித்தது.

பீடைகள், களைகளிடமிருந்து உங்கள் நெற்பயிரைக் காப்பாற்றுங்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

குண்டு. (ஆயிரம் இந்தியா ஓடுகள், மரங்கள், கதவு நிலைகள், யன்னல்கள்) விப ர களுக்கு: S. R. தனேயசிங் கம், ஆனைப்பந்தி. 1018

E L 1106 இலக்க பி.எஸ். ஏ. 2.5 மோட்டார் சைக் கிள் நல்ல நிலையிலுள்ளது. உடன் விற்கனைக்கு ண்டு. எம். டி. குணசேனு புத்தக நிலையம், ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம் என்ற விலா சத்தில் தொடர்பு கொள்ள வும். 1138

ராஜா 127வது தினம் (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா நடித்த
ஒளிவிளக்கு
(ஈஸ்ட்மென் கலர்)
மாதர்களுக்கு அனுமதிக்கட்டணம்

ராணி
(யாழ்ப்பாணம்)
[தினசரி 3காட்சிகள்]
(ஈஸ்ட்மன கலர்-ஹிந்தி)
புதிய கொப்பி
குறிப்பிட்ட சில தினங்கள்

ராஜேந்திரகுமார்
சதனு நடித்த
ஆர்ஸு

கிங்ஸ்லி (கொழும்பு) அயின் (மன்னர்)
மற்றும் சினிமாஸ் திரைகளில்
நாகேஷ் - சுந்தரராஜன்-வசந்தா- மனோரமா நடித்த
ஆலயம்
இப்பொழுது நடைபெறுகிறது
கெப்பிட்டல் பிளாஸா மைலன் (கொழும்பு)
விஜயா (பட்டுநகர்) ஸ்ரீ கிருஷ்ணு (திருமலை) வெலிங்டன் (யாழ்நகர்)



ரவிச்சந்திரன் - காஞ்சனா - நாகேஷ்
நடிக்கும்
அதே கண்கள்

வெஸ்லி சினிமா
(மானிப்பாய்)
தினசரி 6-30, இரவு 10-00
சிவாஜி - பண்டரிபாய் நடித்த
★ கண்கள் ★
Daily 4-30 p.m. only.
The sex life of cities in the world
Forbidden Cities
(Eastman color)
(Strictly for Adults)

இணுவில்
ஸ்ரீ காளிங்கன்
தினசரி 6-30, 9-30 மணி
மத்தியபாயா, போயா 2-30 மணி
முத்துராமன் - காஞ்சனா நடித்த
பாமா விஜயம்

வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
ஜெயலலிதா நடித்த
கலாட்டா கல்யாணம்

REGAL at JAFFNA
Daily 4-45, 7 &9-45 p.m.
Hugh O'Brian,
Mickey Rooney
in
AMBUSH BAY
(Adults)

MANOHARA
JAFFNA
Daily
4-45 7-00&9-45 P.M.
HAMBURG
OFFLIMITS

தேடியது கிடைக்கும்.

சிம்மம்- தற்பெருமை தடுமாற்றம் உண்டு.

கன்னி- வாகன நலன், வரவும் பெருகும்.

துலாம்- பிள்ளைப்பாசம் கொள்ளை இன்பம்.

விருச்சிகம்- இல்லறம் இனிக்கும், விருந்தும் உண்டு.

தனுசு- விழிகள் மோதும், வித்திடும் காதல்.

மகரம்- கரும்பாக இனித்தது. வேம்பாக கசக்கும்.

கும்பம்- பெற்றோர்நலன் பெருமையும் உண்டு.

மீனம்- முயற்சி வெல்லும் முதலிடம் உண்டு.

-சோதிடக் கலாநிதி-
திருமலைவேலுப்பிள்ளை

பாங்கொக்சென்ற இரண்டு வீரர்களில் ஒருவரனயாழ்ப்பாணம் சென்பற்றிக் கல்லூரி மாணவரான செல்வன் பிரான்சிஸ் பாங்கொக்கில் மிகவும் திறமையாக விளையாடியதினுல்இம்முறை ஆசிய இளைஞர் உதைபந்தாட்டத் தெரிவுக்கோஷ்டிக்கு தெரிவு செய்யப்பட்டது இலங்கை உதைபந்தாட்டத்தின் சரித்திரத்தில் முதன்மையானது மட்டுமன்றி யாழ்ப்பாணத்திற்கே மிகப் பெருமையானதுமாகும்.

யாழ். மாவட்டத்தில் தலை சிறந்த 24 உதைபந்தாட்டப் பயிற்சியாளர் இருக்கின்றனர். இவர்களில் பெரும்பான்மையோர், செய்கை மூலம் உதைபந்தாட்டப்பயிற்சி அளிக்காமல், வெறும் புத்தகப்படிப் பின் மூலமே இங்குள்ள வீரர்களுக்கு பயிற்சி அளித்து வருகின்றனர். இவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து வீரர்களுக்கு செய்கைமூலம் உதைபந்தாட்டப்பயிற்சி அளிப்பார்களானுல், வருங்காலத்தில் யாழ்ப்பாண உதைபந்தாட்டத்தின் வளர்ச்சியில் ஒரு பெரும் புரட்சியை ஏற்படுத்த முடியும் என்பது எனது அசையாதநம்பிக்கை.

பெரும்பான்மையினரை, சிறுபான்மையினர் வெற்றி கொள்வதாகில். விளையாட்டு ஒன்றினுல்தான் முடியுமேயன்றி, வேறுவகைகளினல் பெரும் பான்மையோரை வெற்றிகொள்வது கடினம். இதற்கு சிறந்த உதாரணம், இலங்கை பாடசாலே இளைஞர் உதைபந்தாட்டத் தெரிவுக்கோஷ்டி இம்முறை இந்தியாவில் அடைந்த வெற்றியேயாகும்.

வெளிநாடுகளில் பல விளையாட்டுப் பயிற்சியாளர்கள் விளையாட்டில் புதுமையை ஏற்படுத்துவதற்காக பல புதிய ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுவருகின்றனர். அதுபோல் நீங்களும் ஏதாவது ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு வருகின்றீர்களா? என எமது நிருபர் கேட்ட கேள்வி ஒன்றிற்கு திரு. அல்பட் பெர்ணண்டோ கூறியதாவது:

"சாதாரண வீரர்களைக் கொண்டு, சிறந்த பயிற்சியின் மூலம், மிகுபலம்வாய்ந்த கோஷ்டியை உருவாக்குவதே, எனது கடந்த 17 வருட ஆராய்ச்சியாகும். இந்த ஆராய்ச்சியில் நான் ஓரளவு வெற்றியும் அடைந்திருக்கின்றேன். உதாரணமாக கடந்த பத்து வருடகாலமாக, கொழும்பு சென். பென்னடிக்ஸ் கல்லூரியில் வருடாவருடம் சாதாரண வீரர்களைக் கொண்டே மிகவும் பலம்

பாடுகளும் இடம்பெறும். விண்ணப்பங்கள் இம்மாதம் 25-ம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பெற்றோர்தினவிழா

அளவெட்டி. திங்கள் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி பெற்றோர் தின விழா இம்மாதம் 21-ம் திகதி நடைபெற இருக்கிறது. மேற்படி கல்லூரி பெற்றோர் ஆசிரியர் சங்க ஆதரவில் நிகழும் இவ்விழாவுக்கு வடமாநிலக் கல்வி ஆலோசகர் திரு. ச. விசுவலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார் கனிஷ்டபாடசாலே பரிசளிப்பும், ஆங்கில தினவிழாவும் இங்குநடைபெறும். திருமதி ச. விசுவலிங்கம் பரிசில் வழங்குவார். ஆங்கில தினத்தை முன்னிட்டு ஒரு பொருட்காட்சியும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

புதுவருட நிர்வாகிகள்

அளவெட்டி, திங்கள் காங்கேசன்துறை இளம் தமிழர் மன்ற பொதுக் கூட்டம் மன்றப் பணியகத்தில் செல்வன் நா: கடுணைந்த சிவம் தலைமையில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் புதுவருடஅங்கத்தவர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்;-கனக.மகேந்திரா இணைச் செயலாளர்:-பொ சதானந்தன், சி. இலிங்கவேலாயுதம், பொருளாளர்:- ம. நாகேந்திரசீலன், நாகத்துறைச் செயலாளர்:-ப. விக்கினேஸ்வரன், இலக்கியத்துறைச்செயலாளர் நா. கருணனந்தசிவம், விளையாட்டுத்துறைச்செயலாளர்:- செ. சண்முகநாதன். நான்குபேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

0 0 0

யாழ்ப்பாணம், செவ். யாழ்ப்பாணம் ஈச்சமோட்டை ஞானவைரவர் தேவஸ்தானசபையின் பொதுக் கூட்டம் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது. அடியார்கள் பலர் கூட்டத்தில் கலந்துகொண்டனர். பின்வருவோர் புதுவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். போஷகர் திரு. இ. க. தம்பையா, தலைவர் திரு. சி. இராசசூரியர், உபதலைவர் வ. க. சுப்பையா, காரியதரிசி திரு. சி. தியாகராசா, தஞ்சிகாரி திரு. நா. கந்தையா, திரு. சு. சிவராசா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்புலியை நோக்கி அப்போலோ-10 விரைகிறது

டெலிவிஷனில் முதல் முறையாக வர்ணப் படங்கள்

கேப்கென்னடி, மே 19

சந்திரனில் மனிதன் இறங்குவதற்குத் தகுதியான இடம் எது என்பதற்கான இறுதி தேர்வு நடத்துவதற்காக அம்புலியை நோக்கி அமெரிக்காவின் 'அப்போலோ—10' மூன்று விண்வெளி வீரர்களுடன் விரைந்துகொண்டிருக்கிறது.

விண்வெளி ஆராய்ச்சியில் முதல் தடவையாக வர்ண டெலிவிஷன் படங்களை 'அப்போலோ - 10' அனுப்பிவைத்திருக்கிறது.

நேற்று இலங்கை நேரப் படி இரவு 10-19 க்கு பூமியைவிட்டுக் கிளம்பிய விண்வெளிக் கலம் பூமியை ஒரு தடவை சுற்றிவலம் வந்தபின்னர் வாயுமண்டலத்தை விட்டு அம்புலியை நோக்கி விரையத் தொடங்கியது.

விண்வெளிப்பயணத்தின் இரண்டாவது கட்டமாக 'அட்போலோ-10' சூரியனைச் சுற்றியது. இப்போது சந்திரப்பட்டகத்துடன் இணைந்துள்ளது.

'பூமி கருமையாகவும், வெள்ளையாகவும் பச்சையாகவும் நீலமாகவும் காட்சியளிக்கிறது' என்று விண்வெளி வீரர்கள் மிகவும் உற்சாகத்துடன் தெரிவித்தனர்.

சேர்ந்து பறப்பது போன்ற உணர்வு

விண்வெளி வீரர்கள் பறந்துகொண்டிருப்பதை டெலிவிஷனில் லட்சக்கணக்கான மக்கள் பார்த்து மகிழ்ந்துகொண்டிருக்கிறார்கள் முதல் தடவையாக டெலிவிஷன் படங்களை வர்ணத்தில் பார்த்துக்களித்தனர். விண்வெளி வீரர்களுடன் தாமும் சேர்ந்து பறப்பது போன்ற உணர்வு, சில சமயங்களில் ஏற்படுவதாக அவர்கள் தெரிவித்தனர்.

வீரர்கள் மூவரும் எட்டுத் தினங்கள் வானவெளியில் சஞ்சரிப்பார்கள். சந்திரனைச் சுற்றி 2 தினங்கள் பறந்து சோதனை நடத்துவார்கள். விண்வெளி வீரர்களில் ஒருவரான ஜான் யங் மட்டும் வடிவமான பாதையில் வலம் வரும்.

அப்போதுதான் ஸ்டாபோடு, ஷெர்ணன் ஆகிய இருவரும் தனியாக துணை ராக்கெட்டொன்றில் பிரிந்துசென்று சுரங்கப்பாதை வழியாக நுழைந்து தனியே செல்லத் தொடங்குவர்.

முதல்தடவை

மனிதர் ஏறிச்செல்லும் விண்வெளிக்கலங்கள் இரண்டும் ஒரே நேரத்தில் சந்திரனை வலம் வரப்போவது இதுவே முதல் தடவையாகும். அதன்பின்னர் அவர்கள் தமது விண்வெளிப் பயணத்தைப் பலமுறை மாற்றுவர். ஆறு மணி நேரம் இவ்வாறு பிரிந்திருப்பார்கள். பின்னர், இணைந்து பூமியை நோக்கித் திரும்புவர்.

'அப்போலோ-10' பசுபிக் பெருங்கடலில் ஹாவாய்க்கு தென்மேற்கே ஏறக்குறைய 1000 மைல் தொலைவில் இறங்குவாம்.

மறைந்த தமிழக அமைச்சருக்கு மக்கள் இறுதி மரியாதை

காமராஜர், சுப்பிரமண்யம் அஞ்சலி

சென்னை, மே 19

நேற்று மாலை காலமான தமிழக உணவு அமைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமியின் சடலத்துக்கு நூற்றுக்கணக்கானவர்கள் இறுதி மரியாதை செலுத்தினர்கள். அடையாற்றிலுள்ள அவரது உத்தியோக பூர்வமான இல்லத்தில் சடலம் வைக்கப்பட்டுள்ளது.

திரு. கே. காமராஜரும், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திரு. சி. சுப்பிரமணியமும் நேரில்சென்று மறைந்த அமைச்சரின் சடலத்துக்கு இறுதிமரியாதை செலுத்தினர்கள்.

தமிழ்நாடு அரசாங்கம் நான்கு நாளைக்கு துக்கம் அனுஷ்டிப்பதென அறிவித்துள்ளது. இன்று அரசாங்க அலுவலகங்களுக்கு விடுமுறை தினமாக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் பதில் ஜனாதிபதி திரு. பி. வி. கிரி, அமைச்சரின் மறைவு குறித்து பிரிவுச் செய்தி அனுப்பிவைத்துள்ளார்.

அமைச்சர் கோவிந்தசாமியின் மறைவைத்தொடர்ந்து துணைப்பிரதமர் தேசாய் தனது பயணத்தை ரத்துச் செய்துவிட்டார்.

உதக மண்டலத்திலிருந்து தமிழ்நாடு கவர்னர் அனுப்பி வைத்துள்ள செய்தியில் "இரு மையும், ஆற்றலுமிக்க நிர்வாகியை தமிழ்நாடு இழந்து தவிக்கிறது" என்று குறிப்பிட்டுள்ளார்.

"திறமைமிக்க ஊழியர் மறைந்துவிட்டார்" என்று காமராஜர் கூறினர்.

"தமிழக அரசுக்கும், தமிழக மக்களுக்கும் அவர் மறைவு பெரும் இழப்பு" என்று அமைச்சர் திரு கே. ஏ. மதியழகன் சொன்னர்.

"ஏழையாகவே பிறந்து ஏழையாகவே வாழ்ந்து, ஏழையாகவே இறந்தார்" என்று திரு. இரா. நெடுஞ்செழியன் தெரிவித்தார்.

புதுச்சேரியில் அரசாங்க கட்டிடங்களிலெல்லாம் அரைக்கம்பத்தில் கொடிகள் பறக்கின்றன.

மகிழ்ச்சியாக இருக்கிறார் பல் வைத்தியர் பிளேபார்க்

லண்டன், மே 19

மாற்றுஇருதயம் பொருத்தப்பட்டு நீண்டகாலம் வாழ்ந்துவருபவரான தென் ஆபிரிக்காவைச் சேர்ந்த பல் வைத்தியரான பிளேபார்க் இப்போது மகிழ்ச்சியாக இருக்கிறார் சாதாரணமாகச் சாப்பிடுகிறார். நடக்கிறார்.

சில தினங்களுக்கு முன் இவர் நிலைமை கவலைக்கிடமாகி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

விரைவில் இவர் அம்புலன்ஸ் வீட்டுக்கு கொண்டு செல்லப்படுவார்.

படகு கவிழ்ந்து 40 பேர் பலி

கல்கத்தா, மே 19

கங்கையில் படகொன்று கவிழ்ந்ததில் 40 பேர் பலியாகியுள்ளனர்.

ஹம்ஹங்கில் பொட்கர்னி

ஹம்ஹங், மே 19

ஐ.சோ.சோ. கு சுப்ரீம் சோவியத் தலைமைக்குழுத் தலைவர் நிக்கலாய் பொட்கர்னியும் குழுவினரும் தென் ஹம்ஜென் மாவட்டத்தின் நிர்வாக கேந்திரமான ஹம்ஹங்கிற்கு வந்தனர்.

நகரின் பிரதான சதுக்கத்தில் நடந்த கூட்டத்தில் 80 ஆயிரம் மக்கள் திரண்டிருந்தனர் தென் ஹம்ஜென் மாகாண கட்சிக் கமிட்டியின் செயலாளர் லீ சியுன்னும் நிக்கலாய் பொட்கர்னியும் உரை நிகழ்த்தினர்.

நகரிலுள்ள மிகப் பெரிய தொழிலகமான விஞ்லொன் ரசாயனத் தொழிலகத்திற்கு சுக்கிரன் சென்றிறங்கிய 'லூனிக்-4' விண்கலத்துடன்

பாரிஸில் "வீனஸ்"

மாஸ்கோ, மே 19

சோவியத் தன்னியக்க விண்கலமான 'வீனஸ்-4'ன் முழு உருவ மாதிரியொன்று பாரிஸ் லீ போர்ட் கெட்வி மான த் து றை யி லுள்ள சர்வதேச விமான, விண்வெளியியற் காட்சிச்சாலையில் காட்சியிலிடப்படும். இத்தகவலை 'ரூட்' பத்திரிகை நிருபருக்கு காட்சிச்சாலையினது சோவியத் கூடத்தின் இயக்குநர் எம். மிகெயிலோவ் தெரிவித்தார். 1967 அக்டோபர் திங்களில் சுக்கிரனை நெருங்கிய 'வீனஸ்-4' விண்கலம் அனுப்பிய தகவல்களை இந்த மாதிரி விளக்கும்.

72 வயது மூதாட்டி 37 வருட கர்ப்பிணி

காம்போபாலோ. (இத்தாலி) மே.18

72 வயது மூதாட்டியொருவருக்கு சுமார் 37 வருட காலமாக 8 மாத சிசு ஒன்று அவர் உடலுக்குள் இருந்து வந்திருக்கிறது. இது அம் மூதாட்டிக்குத் தெரியாது. வயிற்று வலி யென்று கூறிக்கொண்டு டாக்டரிடம் சென்றுள். அவரைப்பரிசோதித்தடாக்டர்தான் இதைக் கண்டு பிடித்தார். இதைமிகவிரைவில் சத்திரசிகிச்சைமூலம் அகற்றப்போவதாக அந்த டாக்டர் தெரிவித்துள்ளார்.

இந்த அதிசய சம்பவம் இத்தாலியில் நடைபெற்றது.

எப்படி இந்த சிசு இவ்வளவு காலமும் அம் மூதாட்டியின் உடலில் இருந்தது என்ற புதிரையும் இந்த டாக்டர் விளக்கியுள்ளார், 37 வருஷங்களுக்கு முன்னால் இவளது கருப்பை அகற்றப்பட்டது. அப்போது கருப்பையிலிருந்த ஒரு சிசு எப்படியோ தப்பிப்போய் சிறுகுடலில் தங்கிவிட்டது 8மாத காலமாக இது வளர்ச்சியுறும்போது கர்ப்பகாலக் கோளாறுகள் யாவும் வழக்கம்போல் இவருக்கு இருந்ததாம். இக் கோளாறுகள் யாவற்றையும் சத்திரசிகிச்சைக்குப் பின் ஏற்பட்ட கோளாறுகளாகவே கருதிவிட்டார் டாக்டர்.

காலப்போக்கில் இக் கரு

வாக்காளர் கணிப்பு

யாழ்ப்பாணம், செவ்வாய்

ஒவ்வொரு தொகுதி தோறும் கிராம சேவையாளர் பிரிவு ரீதியாக வாக்காளர் கணக்கெடுப்பை சரியான முறையில் அடுத்த 3 மாதத்துக்குள் எடுத்து முடிக்குமாறு தேர்தல் கமிஷனர் சகல கிராம சேவையாளர்களையும் சுற்றறிக்கை யொன்றின் மூலம் வேண்டியுள்ளார்.

பழைய தேர்தல் வாக்காளர் இடாப்பு மூலம் இதனைச் சரி செய்து ஜூன் 1ம் திகதி முதல் அடுத்த 3 மாதத்திற்கு முன் முடிக்குமாறு இந்தச் சுற்றறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஆகஸ்ட் மாதத்தில் கணக்கெடுப்பு முடிந்ததும், தேர்தல் தலைமைக் காரியாலயத்தின் பரிசீலனையின் பின் ஒரு மாத காலம் பொதுமக்கள் பார்வைக்காக இந்த வாக்காளர் இடாப்பு சகல தொகுதிகளிலும் வைக்கப்படும்.

(கா. நி)

— —

இந்த சந்ததிபற்றி ஜே. ஆர்.

காலி, திங்கள்

'தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் மாத்திரம் மக்கள் திருப்தியுடையவர்களாக விருக்கக்கூடாது தங்கள் நாட்டுக்காக இவர்கள் செய்யவேண்டிய கட-

கையொப்பம் பெற்றபின்னர் சம்பளம் கொடுக்க மறுத்தாராம்

முல்லைத்தீவு திங்கள்

தண்ணீரூற்று அரசினர் முஸ்லிம் பாடசாலையில் உள்ள உதவி ஆசிரியர் ஒருவர் தனது சம்பளத்தை சம்பளப்பட்டியலில் கையொப்பம் வாங்கிய பின் தலைமை ஆசிரியர் கொடுக்கமறுத்தாரென்றும், எனவே தமது சம்பளத்தைப் பெற்றுத் தருமாறும் வடமாநிலவித்தியாதிபதிக்கும், வவுனியா பிரதம கல்வி அதிகாரிக்கும் செய்த முறைப்பாடுகளைத் தொடர்ந்து முல்லைத்தீவு வட்டாரக் கல்வி அதிகாரி திரு. செ. கந்தையா விசாரணை நடாத்திவருகிறார்.

பூச்சி மருந்து குடித்த மாணவன் மரணம்

வல்வெட்டித்துறை, திங்கள்

அல்வாய் தெற்கு மாலி சந்தை சின்னத்தம்பி வித்தியாலயத்தில் படிக்கும் ஆறு வயதுச் சிறுவன் ஒருவனுக்கு அவ்வித்தியாலயத்தில் பூச்சிக்காக மருந்து கொடுக்கப்பட்டதாம். மருந்து குடித்த சிறுவனுக்கு பிற்பகல் வரை வயிற்றுவலி போகவில்லை. பிற்பகலுக்குப் பின்னர் தாயார் குளிக்கவார்த்துச் சாப்பாடு கொடுத்தாராம். சாப்பாடு கொடுத்த சிறிது நேரத்தின்பின் சிறுவனுக்கு வாயால் வாந்தி வந்திருக்கிறது. இதனால் பயந்துபோன தாயார் அடுத்தநாள்காலை அண்மையிலிருந்த வைத்தியரிடம் காட்டியபோது வைத்தியர் உடனே ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லுமாறு கூறி அனுப்பினர். சிறுவன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதும் இறந்து கிடக்கக் காணப்பட்டதாக பரிசோதனை செய்த டாக்டர் கூறினராம். சிறுவன் இறக்கவேண்டிய காரணம் தனக்குத் தெரியவில்லையெனக் கூறியதும் மரணவிசாரணை அதிகாரி விசாரணையை நிறுத்திப் பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டுள்ளார்.

பூச்சி மருந்தைப் பொதுப் பாவனைக்கு விற்பனை செய்யும் போது அதனைக் குடித்தால் மரணம் ஏற்படுமென்ற எச்சரிக்கை அறிவித்தல் அதில் பொறிக்கப்படுத்தாத

'ஈழநாடு' புளுகுப் போட்டி - (4)

பின் வரும் கடிதத்துக்கு விளக்கம் தேவையில்லை:

212/4, கண்டிரோட்,
பேலியகொடை,
14-5-69.

பொதுமுகாமையாளர்,
"ஈழநாடு".
அன்புடையீர்,

தாங்கள்நடாத்தியபுளுகுப் போட்டியில் முதலாவதுபோட்டியிலேயே முதற் பரிசுக்குரியவளாக என்னைத் தேர்ந்தெடுத்தமைக்கு மிகுந்த நன்றி உடையேன். அதே போன்று தாங்கள் அனுப்பிய தபாற் கட்டளையையும் இத்துடன் திருப்பி அனுப்பியுள்ளேன். எனது பெயராலேயே தாங்கள் நடாத்தும் ஏதாவது ஒரு போட்டியில் பரிசு பெறுபவருக்கு ஏதாவது ஒரு பொருளாக இதனை உபயோகப்படுத்தவும். இப்படிச் செய்ய வேண்டுமென நேரத்தோடேயே தீர்மானித்திருந்தும் உடன் அறிவிக்கத் தவறியதனால் தங்களுக்கு வீண் சிரமத்தை ஏற்படுத்திவிட்டேன். மன்னிக்கவும்.

தாபன ரீதியில் பெரிதும் வளர்ந்த பத்திரிகைகள் செய்யத் துணியாத பரிசுப்போட்டியை 'ஈழநாடு' போன்ற சிறிய பத்திரிகை செய்வது மிகவும் பாராட்டுதற்குரியது. 'ஈழநாடு' தனது பத்தாவது ஆண்டு பூர்த்திவிழாக் கொண்டாடுவது போன்று அதன் வெள்ளிவிழா, பொன்விழாக்களும் நடைபெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக்கொள்ளுகிறேன்.

வணக்கம்.

இப்படிக்கு,
'ஈழநாடு அபிமான வாசகி,
ப. புகலெச்சுமி.

நேயர் யுகலெச்சுமியின் விருப்பத்திற்கிணங்க அவர் திருப்பி அனுப்பிய பரிசுப்பணம் மூன்றுவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரர்கள் மூவரும் எடுத்து தினங்கள் வானவெளியில் சஞ்சரிப்பார்கள். சந்திரனைச் சுற்றி 2 தினங்கள் பறந்து சோதனை நடத்துவார்கள். விண்வெளி வீரர்களில் ஒருவரான ஜான் யங் மட்டும் அதிக உயரத்தில் தனியாகப் பறப்பார். ஸ்டாபோர்டு, ஷெர்ஞன் ஆகிய வீரர்கள் 'அப்போலோ-10' ராக்கெட்டிலிருந்து துணை ராக்கெட்டைப் பிரித்துசென்று சந்திரனுக்கு மிகக் குலைந்த உயரத்தில் பறப்பார்கள்.

பிரிந்து செல்வர்

இரண்டு லட்சம் மைல் விண்வெளியில் கடந்தபின்னரே இந்தச்சாதனை மேற்கொள்ளப்படும். அப்போலோ-10 முதலில் ஒரு நீள்வட்டவடிவமானபாதையில் வரும். பின்னர் 70 மைல் உயரத்தில் வட்ட

படகு கவிழ்ந்து 40 பேர் பலி

கல்கத்தா, மே 19

கங்கையில் படகொன்று கவிழ்ந்ததில் 40 பேர் மாண்டனர். இந்நப்படகில் 50 பேர்கள் இருந்தார்கள். பத்துப்பேர்கள் மீட்கப்பட்டு விட்டனர். ஆனால் அவர்களில் ஒருவர் பின்னர் இறந்துவிட்டார்.

ஓய்வுபெறுகிறார்

புதுடில்லி, மே 19

இந்திய தளபதி மேஜர் குமாரமங்கலம் அடுத்த மாதம் 8ம் திகதி பதவியிலிருந்து ஓய்வு பெறுகிறார். அவருக்குப்பதில் தளபதியாக மனக்ஷா 9ம் திகதி பதவி யேற்பார்.

கரவெட்டி, திங்கள்

வடதுன்னை அல்லையம்பதி சிவசுப்பிரமணியசுவாமி கோவில் வருடாந்த உற்சவம் நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. 30-ம் திகதி ரதோற்சவமாகும்.

'ஜனநாயக இஸ்ரேல் நாட்டை உருவாக்க விரும்புகிறார்கள்'

'அல் அஹ்ரம்' ஆசிரியர் பேட்டி

கொழும்பு, திங்கள்

சின்னஞ்சிறு நாடானஇஸ்ரேல், அரபுநாடுகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து அழித்துவிட முயற்சிக்கின்றன என்ற இஸ்ரேலின் பொய்ப்பிரசாரத்தை யாரும் நம்பிமய கிவிடக்கூடாது என்று இலங்கையில்நான்கு நாள் சுற்றுப் பிரயாணம்செய்த, ஐக்கிய அரபுக் குடியரசின் பிரபல நாளிதழான 'அல் அஹ்ரம்' என்ற பத்திரிகையின் ஆசிரியர் குழுவைச்சேர்ந்த டாக்டர் குலோவிஸ் மக்ரூத் பத்திரிகைநிருபர்களிடம்பேசும் போது கூறினார்.

முத்து, முத்தாய் அரும்பிய வியர்வைத் துளிகளை ஒரு கைக்குட்டையால்அடிக்கடி துடைத்துக்கொண்டே சுமார் இரண்டு மணித்தியாலம் ஈழத்துப் பத்திரிகையாளர்களின் சமாரியானகேள்விகளுக்கெல்லாம் 'பட் பட்' டென்று பதிலளித்தார்இந்த எகிப்துப் பத்திரிகையாளர்.

ஐக்கிய அரபுக் குடியரசு ஜனாதிபதி நாஸரின் உத்தியோகபூர்வமான கருத்துக களைப் பிரதிபலிக்கும் பத்திரிகை 'அல் அஹ்ரம்' ஆதலால், டாக்டர் குலோவிஸ் மக்ரூத் நடத்திய இந்தப்பத்திரிகையாளர் மாநாட்டிற்கு உள்நாட்டு, வெளிநாட்டுப் பத்திரிகைப் பிரதிநிதிகள் பெரும்பாலோர் ஆர்வத்துடன் வந்திருந்தனர்

யூதர்கள் பிறநாட்டு மக்களோடு, பிறஇன மக்களோடு இரண்டறக் கலந்து வாழ்வது ஒருபோதும் சாத்தியமில்லை. எனவே உலகெங்கிலுமுள்ள யூதர்கள் வாழ்வதற்கென்றே தனிநாடுவேண்டுமென்ற அடிப்படையில் இஸ்ரேல் உருவாக்கப்பட்டதென்று கூறிய டாக்டர் மக்ரூத், இன்றுள்ள கிழக்காபிரச்னைகளுக்கெல்லாம் இந்த அடிப்படையான கொள்கைதான காரணம் என்றுசொல்லிபின்வருமாறு விளக்கினார்.

யூதர்கள்வேறு எந்தஇனத்தோடும் எந்தநாட்டு மக்களோடும் இரண்டறக் கலந்து வாழ முடியாது என்றகொள்கையின அடிப்படையில் இஸ்ரேல் நாடு, ஏகாதிபத்திய வாதிகளின் பக்கபலத்துடன் உருவாக்கப்பட்டதல்ல, பாலஸ்தீன அராபியர்களை அவர்களின் பூர்வீக இடங்களிலிருந்து விரட்டியடித்து ஒழித்துவிடுவதில் இஸ்ரேல் ஆரம்பகாலத்திலிருந்தேஅக்கறை காட்டி வருகிறது. ஐ நா. தீர்மானத்தின்படி, பாலஸ்தீன அராபியர்களுக்காக ஒதுக்கப்பட்ட இடத்தைக்கூட இஸ்ரேலியர்கள் கைப்பற்றிக்கொண்டுள்ள தோடு நிற்காமல், இன்று வரையும் தங்களுடைய நாட்டு எல்லையை ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளைமேற்கொண்டு விஸ்தரித்துக் கொள்வதிலேயே முழுக்கவனத்தையும் செலுத்துகின்றனர்.

அராபியமக்கள் இஸ்ரேலை அழித்துவிடவேண்டுமென்று ஒருபோதும் எண்ணவில்லை. மதச்சார்புள்ள, யூதர்கள் மட்டுமே வாழுகின்ற எதேச்சாதிகார இஸ்ரேல்நாட்டை மாற்றி, மதச்சார்பற்ற. யூதர்களும் பிற இனத்தவரும் இரண்டறக் கலந்து வாழ்கின்ற ஜனநாயக இஸ்ரேல் நாட்டைத்தான் அராபியமக்கள் உருவாக்கநினைக்கிறார்கள்.'

மதச்சார்பற்ற இஸ்ரேல் நாட்டை, அராபியர்கள் விரும்புகிறார்கள் என்பதற்கு ஓர் அறிகுறியாக பாலஸ்தீன விடுதலைப்போராட்ட வீரர்கள் இந்திய சுதந்திரப் போராட்டத்தை முன்மாதிரியாகவைத்துத்தான் போராடுகிறார்கள். எனவே இந்தியாவைப்போல ஒரு மதச்சார்பற்ற நாட்டைத்தான் - இஸ்ரேலைத்தான் பாலஸ்தீன விடுதலைப் போராட்ட வீரர்கள் உருவாக்க உழைக்கிறார்கள் என்று டாக்டர் மக்ரூத் வலியுறுத்தினர்.

சர்வதேச மக்களின் அபிப்பிராயத்திற்கு விரோதமாக இஸ்ரேல் ஆரம்பகாலத்திலிருந்தே நடந்துவருகின்ற தென்று குற்றஞ்சாட்டிய டாக்டர் மக்ரூத், எல்லா ஐ. நா. தீர்மானங்களையும் அரபு நாடுகள் ஏற்றுக்கொண்டுள்ளபோதும் இஸ்ரேல் எல்லாவற்றையுமே உதாசீனம்செய்துவந்ததாகக்கூறினார். ஐ. நா. இஸ்ரேலை இதுவரை 27 முறை கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றியிருப்பதை டாக்டர் மக்ரூத் சுட்டிக்காட்டினார்.

யாழ்ப்பாண நகரில்

10 000 பேரின் இரத்தம் பரிசோதனை செய்யப்பட்டது

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாண நகரில் இம்மாதம் 10-ந் திகதி ஆரம்பமானயானைக்கால்நோய் தடுப்பியக்கத்தில் இதுவரைஇங்குள்ள சுமார்10.000பேரை இரத்தப் பரிசோதனை செய்துள்ளதாக சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

வட்டாரரீதியாக நடைபெற்றுவரும் இத்தடுப்புஇயக்க நடவடிக்கைகளை உலக சுகாதார ஸ்தாபனத்தினதும் யானைக்கால் நோய் தடுப்பியக்கத்தின் ஆதரவுடனும் சுகாதாரப்பகுதியினர் நடத்திவருகின்றனர்.

சுகாதாரப் பரிசோதகர் திரு செ. சண்முகநாதனின் மேற்பார்வையில் சுமார் 10 ஊழியர்கள் மேற்கொண்டிருக்கும் இத்தடுப்பு இயக்க வேலைகள் இன்று இரவு 11-30 மணியுடன்முடிவடைகின்றது.

இந்நோய் பரவாவண்ணம் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சுகாதாரப் பகுதியினர் பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வருடத்திற்கு ஒருதடவையாவது இரத்தத்தைப் பரிசோதனை செய்யவேண்டும்.

இரத்தத்தில் புழுக்கள் காணப்பட்டால் முற்றும் ஒழியும்வரை சிகிச்சை செய்யவேண்டும்.

சிகிச்சை முடிந்தபின் பத்தாம் நாளிலிருந்து நாற்பது நாட்களுக்கு கிழமையிலும் அதன்பின் வருடத்திற்கு ஒருதரமும் இரத்தத்தைப் பரிசோதிக்கவேண்டும்.

வீடுகளிலும் சுற்றுப்புறங்களிலும் நுளம்பு உண்டாகாதவாறு பார்த்துக் கொள்ளவேண்டும். (கா நி.)

"இலங்கையரல்லாதவருக்கு 'லைசென்ஸ்' வழங்கப்படவில்லை"

கலால் உதவி கமிஷனர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், செவ்.

இலங்கையரல்லாதவர்களுக்கு 1954-ம் ஆண்டுமுதல் கள்ளுச் சீவுவதற்கு லைசென்ஸ் வழங்கப்படுவதில்லையென்றும், இலங்கையரல்லாதவர்களுக்கு லைசென்ஸ் வழங்கப்பட்டிருப்பது பற்றி தன்கவனத்திற்குக்கொண்டுவந்தால் நடவடிக்கை எடுப்பதாகவும், வடபகுதி கலால் பகுதி உதவி கமிஷனர், நேற்று கச்சேரியில், நடந்த மகாநாட்டில் தெரிவித்தார்.

வடஇலங்கை ஐக்கியசீவல் தொழிலாளர் சங்க தூதுக் கோஷ்டியொன்று, இலங்கை தொழிற்சங்க சம்மேளனம் சார்பில் திரு. என். முத்தையா தலைமையில், அரசாங்க அதிபரை நேற்றுக் காலை சந்தித்தது. அப்பொழுது கலால்பகுதி உதவி கமிஷனர்மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இத்தூதுகோஷ்டியில் வடஇலங்கை சீவல் தொழிலாளர் சங்க பொதுச்செயலாளர்திரு. வி. ரி.செல்வராசா அமைப்பு செயலாளர் திரு. எம். முத்தையா, உபதலைவர் திரு. எல் கணேசன், பொருளாளர் திரு.ஏ.ராசன் ஆகியோர் சென்றிருந்தனர்.

தூதுகோஷ்டியினர் அரசாங்க அதிபரிடம் தங்கள் கோரிக்கைகளடங்கிய மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்தனர்.

காலி, திங்கள்

'தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் மாத்திரம் மக்கள் திருப்தியுடையவர்களாக விருக்கக்கூடாது தங்கள் நாட்டுக்காக இவர்கள் செய்யவேண்டிய கடமையும் உள்ளது. இப் பொழுதுள்ள சந்ததியினர் நாடு சுதந்திரமடையு முனனர் இருந்தவர்களையும் சுதந்திரமடைந்த பின்னர் உள்ளவர்களையும் தொடர்புபடுத்துபவர்களாவர்.

காலி ஹபுகால மகாவித்தியாலய பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனை மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து பேசுகையில் தொழில்பெறுவதற்காக மட்டும் மாணவர்களுக்குக்கல்வி புகட்டக் கூடாதென்றும், கல்வியோடு ஒழுக்கத்தையும் கற்பிக்கவேண்டுமெனவும் கூறினர்.

நிதிஅமைச்சர், உள்நாட்டமைச்சர் உட்பட்ட பல பிரமுகர்கள் இவ்வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றினர்.

ஆலயஉற்சவங்கள்

அராலி, திங்கள்

அராலி கிழக்கு ஆவரம்பிட்டி முத்துமாரி அம்மன் ஆலய ஆண்டுவிழா எதிர்வரும் 23-ம் திகதி நடைபெறும். கொடியேற்ற விழாவுடன் ஆரம்பமாகி எட்டுநாட்கள் நடைபெறும். ஒன்பதாவது தினமாகிய சனிக்கிழமை நடைபெறும் வேள்வி விழாவுடன் விழா முடிவடையும். இவ்வாலயத்தில் மிருக பலியிடுதல் 1942-ம் ஆண்டிலிருந்து தடை செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

0 0 0

வல்வெட்டி வேவிற்பிள்ளையார் கோவில் வருடாந்த உற்சவம் இம்மாதம் 22-ம் திகதி ஆரம்பமாகிறது. 30ம் திகதி தேர்த்திருவிழா நிகழும்.

இன்று

அளவெட்டி, செவ்வாய்

தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தின் ஆதரவில் கயப்பாக்கம் சித்தாந்த வித்தகர் திரு. மு. சோமசுந்தரம் செட்டியார் ''சக்தி வழிபாடு'' என்னும்பொருள் பற்றி இன்று உரையாற்றுவார். இச் சமயசொற் பொழிவு நிகழ்ச்சி ''சித்திர சுடரொளி'' ஆசிரியர் திரு. நா. செல்லப்பா தலைமையில் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் நிகழவிருக்கிறது.

காலி, திங்கள்

'தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் மாத்திரம் மக்கள் திருப்தியுடையவர்களாக விருக்கக்கூடாது தங்கள் நாட்டுக்காக இவர்கள் செய்யவேண்டிய கடமையும் உள்ளது. இப் பொழுதுள்ள சந்ததியினர் நாடு சுதந்திரமடையு முனனர் இருந்தவர்களையும் சுதந்திரமடைந்த பின்னர் உள்ளவர்களையும் தொடர்புபடுத்துபவர்களாவர்.

காலி ஹபுகால மகாவித்தியாலய பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனை மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து பேசுகையில் தொழில்பெறுவதற்காக மட்டும் மாணவர்களுக்குக்கல்வி புகட்டக் கூடாதென்றும், கல்வியோடு ஒழுக்கத்தையும் கற்பிக்கவேண்டுமெனவும் கூறினர்.

நிதிஅமைச்சர், உள்நாட்டமைச்சர் உட்பட்ட பல பிரமுகர்கள் இவ்வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றினர்.

ஆலயஉற்சவங்கள்

அராலி, திங்கள்

அராலி கிழக்கு ஆவரம்பிட்டி முத்துமாரி அம்மன் ஆலய ஆண்டுவிழா எதிர்வரும் 23-ம் திகதி நடைபெறும். கொடியேற்ற விழாவுடன் ஆரம்பமாகி எட்டுநாட்கள் நடைபெறும். ஒன்பதாவது தினமாகிய சனிக்கிழமை நடைபெறும் வேள்வி விழாவுடன் விழா முடிவடையும். இவ்வாலயத்தில் மிருக பலியிடுதல் 1942-ம் ஆண்டிலிருந்து தடை செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

0 0 0

வல்வெட்டி வேவிற்பிள்ளையார் கோவில் வருடாந்த உற்சவம் இம்மாதம் 22-ம் திகதி ஆரம்பமாகிறது. 30ம் திகதி தேர்த்திருவிழா நிகழும்.

இன்று

அளவெட்டி, செவ்வாய்

தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தின் ஆதரவில் கயப்பாக்கம் சித்தாந்த வித்தகர் திரு. மு. சோமசுந்தரம் செட்டியார் ''சக்தி வழிபாடு'' என்னும்பொருள் பற்றி இன்று உரையாற்றுவார். இச் சமயசொற் பொழிவு நிகழ்ச்சி ''சித்திர சுடரொளி'' ஆசிரியர் திரு. நா. செல்லப்பா தலைமையில் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் நிகழவிருக்கிறது.

வணக்கம்.

இப்படிக்கு,
'ஈழநாடு' அபிமான வாசகி,
ப. புகலெச்சுமி.

நேயர் யுகலெச்சுமியின் விருப்பத்திற்கிணங்க அவர் திருப்பி அனுப்பிய பரிசுப்பணம் மூன்றுவது புளுகுப் போட்டியில் வெற்றி பெறுபவருக்கு அனுப்பப்படும்.

பரிசு பெறும் புளுகு

இம்முறை மிகவும் சிறந்ததென போட்டிக் குழு தெரிவு செய்த புளுகு இதுதான்:

'சந்திரனுக்குப் பயணமாகும் அமெரிக்க விண்வெளி வீரர்கள் அங்கிருந்து கொஞ்சம மண்ணை எடுத்து பூமிக்குக் கொண்டுவரப் போகிறார்களாம். இம்முயற்சியில் உதவி செய்வதற்காக யாழ்ப்பாணத்தில் மாட்டு வண்டிலைக் கண்டுபிடித்த விஞ்ஞானி பொ. கந்தையாபிள்ளை உடனடியாக தமது ஓரணை மாட்டு வண்டிலுடன் கென்னடி முனைக்கு புறப்பட இருக்கிறார்

இதை எழுதியவர்: கே. பரமேஸ்வரன், இருபாலைச் சந்தி, கோப்பாய்.

பாராட்டுக்குரிய புளுகுகள்

பின்வரும் நேயர்களின் புளுகுகளும் பாராட்டுக்குரியன. மிஸ். பி. எஸ். ராசையா, 99 கெமன் பில்டிங், டிக்கோயா. சி. சுப்பிரமணியம், 10/1, நல்லூர் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். சி. பாலசுந்தரம், வளர்மதி தெரு, தெள்ளுளுவை, வல்வெட்டித்துறை. எஸ். பி. கிருஷ்ணன், 45, புங்கங்குளம் வீதி, யாழ்ப்பாணம்.

புளுகுப் போட்டி (4)

இந்தப் போட்டிக்கு உங்கள் புளுகுப்பெட்டியை திறந்து ஆயத்தமாய் இருங்கள். புளுகு ஐம்பது சொற்களுக்கு மேற்படப்படாது. ஐம்பது சொற்களுக்கு ஐந்து ரூபாய் பரிசு!

நிபந்தனைகள்

ஒருவர் எத்தனை புளுகுகளையும் எழுதி ஒரே உறையில் அனுப்பலாம். ஆனால் ஒவ்வொரு புளுகுடனும் கீழ்க்காணப்படும் கூப்பன் ஒன்று இணைக்கப்பட வேண்டும். அனுப்ப வேண்டிய விலாசம்: புளுகுப்போட்டி (4) 'ஈழநாடு', த. பெ. இலக்கம்: 49, யாழ்ப்பாணம்.

விடைகளை 'ஈழநாடு' காரியாலயத்தில் நேரடியாகவும் சமர்ப்பிக்கலாம். எல்லா விஷயங்களிலும் போட்டிக் குழுவின் தீர்ப்பே முடிவானது. போட்டி சம்பந்தமான எவ்வித கடிதப்போக்குவரத்தும் வைத்துக் கொள்ள வேண்டாம். 'ஈழநாடு' ஊழியர்களும் அவர்களுடைய குடும்பத்தினரும் இப்போட்டியில் கலந்து கொள்ளமுடியாது. மிகச் சிறந்ததெனக் கருதப்படும் புளுகுக்கு ரூபா ஐந்து (ரூ. 5/-) பரிசுப்பணமாக வழங்கப்படும். போட்டி முடிவு திகதி 24-5-69. வெற்றிபெறும் புளுகும் அதைப் புனைந்தவரின் பெயரும் 27-5-69 இல் வெளியாகும்.

'ஈழநாடு'

புளுகுப்போட்டி (4)

பெயர்: .....

விலாசம்: .....

.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

மற்றவர்கள் நினைப்பதெல்லாம் கெட்டது என்றும் நாம் நினைப்பது தான் நல்லது என்றும் சொல்வதும், நம்மிலிருந்து மாறுபட்ட கருத்துக் களைக் கொண்டிருப்பவர்கள் நாட்டின் பகைவர் கள் என்று சொல்வதும் மிகவும் கெட்டபழக்கம்

—மகாத்மாகாந்தி.

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389,

யாழ்ப்பாணம், சௌமியவருஷம் வைகாசி மாதம் 7-ந் திகதி (20 - 5 - 69)

ஆசியாவில் ஜனநாயகம்

ஆசியாவில் ஜனநாயக வாழ்க்கைமுறை நிலைபெற முடியுமா? ஜனநாயகம் இங்கு தோல்வியடைந்து விட்டதா? ஆசிய நாடுகளுக்கு ஏற்ற அரசியல் அமைப்பு என்ன? இந்தக் கேள்விக ளுக்குத் தகுந்த விடைகளை ஆராய்ந்து காணவேண்டிய அவசியம் ஆசிய நாடுகளுக்கு ஏற்பட்டிருக்கிறது.

பர்மாவில் ஜனநாயகம் தோல்வியடைந்து அங்கு இரா ணுவ ஆட்சியே நீடித்துவரு கிறது. பாகிஸ்தானில் ஜன நாயக ஆட்சிமுறைக்கு ஆபத் தேற்பட்டு ஜெனரல் அயூப் கான தலைமையில் அங்கு இராணுவ ஆட்சி பத்து வரு டங்களுக்கு முன்னர் ஏற்பட் டது.

ஜனநாயக ஆட்சி முறை பாகிஸ்தானுக்கு ஏற்றதல்ல வெனக் கருதிய அயூப்கான் 'அடிப்படை ஜனநாயகம்' என்ற புதியதொரு ஆட்சி அமைப்பு முறை யைக் கொண்டுவந்து அமுல்நடத்த முனைந்தார். அதுவும்கூட அங்கு செயல்பட முடியா தென்பதற்கு இன்று ஜென ரல் யாஹ்யாகான் தலைமை யில் அங்கு இராணுவ ஆட்சி ஏற்பட்டிருப்பது சான்று. பர்மா, பாகிஸ்தான்இந்தோ னேஷியா மற்றும் ஆபிரிக்க நாடுகள் பலவும் அந்நிய ஆட்சியிலிருந்து விடு தலை பெற்றதும் ஜனநாயக ஆட்சி அமைப்பைப் பின்பற்றி மக் கள் ஆட்சியை நிலைநாட்டவே முயன்று வந்தன, ஆமினும் இந்த நாடுகளில் தோல்வி யையே கண்டிருக்கிறன. ஜன நாயக வாழ்க்கை முறைக்குப் பல பல சோதனைகள் ஏற் பட்டுவந்துள்ள போதிலும் இலங்கை, இந்தியா, மலே ஷியா, ஆகிய நாடுகளே இது வரை ஜனநாயக ஆட்சிய மைப்பினைப் பற்றி வந்திருக் கின்றன. இந்த நாடுகளி லும் இதுவரை இன,மத ஒற் றுமைக்கு ஓர் எடுத்துக்காட் டாக விளங்கி வந்திருப்பது மலேஷியா அந்த நாட்டின் பிரிட்டனின் வாழ்க்கை முறையின் அடிப்படையில் பிரிட்டிஷாரின் ஆலோசனை யின் மீது ஆசிய நாடுகள் ஜனநாயக ஆட்சி அமைப்பை ஏற் படுத்திக்கொண்டன. பிரிட்டனுக்குப் பொருத்த மான ஆட்சி அமைப்புமுறை ஆசிய நாடுகளில் பரீட்சார்த் தமாகவே பின்பற்றப்பட்டு வந்துள்ளது. இனியும் இந்த சோதனை தேவையா?

வேலையில்லாத் திண் டாட் டம், பசி, பட்டினி மக்கள் மத்தியில் விரக்தியை ஏற்ப டுத்திப் பலாத்காரமனப்பான் மையை ஏற் படுத்துகிறது. இப்பொழுது நமது நாடுக ளில் பின்பற்றப்படும் ஆட்சி அமைப்பு முறை அதிகாரப் போட்டியையும், பதவிப் போட்டியையும் வளர்ப்பதற் குத்தான் உதவுகிறதே யொழிய மக்களின் நலனி லும் மக்களின் வாழ்விலும் அக்கறை செலுத்த உதவுவ தாக இல்லை.

இலங்கையைஒரு குடியரசா கப்பிரகடனப்படுத்த வேண்டு மென்றும் அரசியல் அமைப் பைத்திருத்தியமைக்க வேண் டுமென்றும் பல வருடமாக முயற்சி செய்யப்படுகிறது.

இனியும்தாமதிக்காமல்மக் கள் ஐக்கியமாகவும் மகிழ்ச்சி யாகவும் திருப்தியாகவும் வாழக்கூடிய ஒவ்வொருவ ரும் சுதந்திரமாக வாழக் கூடிய நமது நாட்டின் அமைப்புக்கும்சூழ் நிலைக்கும் ஏற்ற புதிய அரசியல் அமை ப்பு ஒன்றை கடந்தகால அனு பவங்களைக் கொண்டு உரு வாக்க நாட்டின் அமைநியி லும் சுயீட்சத்திலும் அக்கறை யுள்ள அனைவரும் முன்வர வேண்டும். இல்லையேல் பர்மா பாகிஸ்தான், மலேஷியா என்ற பட்டியலில் இலங்கை யும் சேரவேண்டிய நிலை ஏற் படலாம்

ஆசிரியருக்கு கடிதம்

குறைகள்

கொடைத்திறன்மிக்க சேர் பரம்பரை

தமிழகத்தை ஆண்ட சேர, சோழ, பாண்டியர் என்னும் முடியுடைய வேந் தர் மூவருள்ளும் முதற்கண் வைத்து எண்ணப்படும் பெருமையுடையோர் சேர வேந்தராவர். இம்மன்னர் களின் வரலாற்று புற நானூறு முதலிய நூல்க ளிலே காணப்படினும், சங்க இலக்கியங்களில் ஒன்றுகத் திகழும் பதிற்றுப்பத்து என் னும் தனிப்பெரும் நூல் அவர்களின் ஆண்மை, செங் கோன்மை. கொடைத் திறன் முதலியவற்றை முழு மையாக விரித்துரைப்ப தைக் காணலாம். சேர மன் னர்கள் மிக்க கைவன்மை யுடையர் என்பதை அரிசில் கிழார் புலவர்''நின்வளனும் ஆண்மையும்கைவண்மையும் மாந்தர் அரைவிந்தன்''என வும், ''உயிர்போற்றலையே செருவத்தானே கொடை போற்றலையே இரவலர் நடு வண்'' எனவும் பதிற்றுப்பத் தில் கூறுவதினாலும், ''வரையா வீகைக்குடவர் கோவே'' என புறநானூற் றில் வருவதினாலும், நன்கு உணர்ந்து அறிந்து கொள்ள லாம்.

பதிற்றுப்பத்துச் சேரர் களுள் மிகச்சிறந்த புகழ் மிக்கவன் இமயவரம்பன நெடுஞ் சேரலாதன். அதன் பின் அவர் தம்பி பல்யானைச் செல்கெழுகுட்டுவன். அத னைத் தொடர்ந்து களங் காய்க்கண்ணி நார்முடிச் சேரலாதன், ஆடு கோட் பாட்டுச் சேரலாதன், செங் வக்கடுங்கோவாழி யாத ன் என்பவர்களின் ஆட்சித் திறனும், கொடைத்திறனும் சேரர் குலப் பெருமையை மாநிலமுழுவதற்கும் விண் ணுலகமதிபோல விளங்கு வைத்தமையை பதிற்றுப் பத்து என்னும் சங்கநூல்

அமரர் பண்டிதமணி அருளம்பலவனரின் நினைவுதினம் இன்று அன்னர் இறுதியாக இலங்கைப் பல்கலைக்கழகத் தில் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கத்தை இத்தினத்தில் வெளியிடுகிறோம்.

அரண்மனை அட்டிற்சாலையிற் கடலொலி போன்று ஒலி யெழுமாறு கொழுவிய திசை பொறிக்கப்பட்டது. வரு வார்க்கெல்லாம் உணவு வழங்கும் பொருட்டு பேரள வினதாகிய நெல் உலக்கை களின் பூண்கள் மழுங்குமாறு குற்றப்பட்டது. பெரிய மிடாக்கள் பல வற்றில் ஊனெடு கூடியசோறு மிகு தியாக ஆக்கி இரவலர்க்கு அளித்தான்.

உலகத்திலே செல்வர்கள் பலர் இருக்கின்றார்கள் அவர் கள் இல்லை என்று இரப் போர்க்கு இல்லை என்னுது ஈந்துபிறர்க்கென வாழாமை யின் அவர்புகழ் மேம்பட்டு விளங்காதாயிற்று நார்முடிச் சேரல் இரவலர் பொருளை விரும்பிக்கேட்டதற்கு முன் னரே வேண்டும் பொருளை மனமுவந்துஅளித்துப்பிறர்க் கென வாழ்ந்தான். இதனால் செல்வர் புகழினும் இவன் புகழ் மேம்பட்டு விளங்கு வதாயிற்று ''மலர்ந்தவேங் கையின் வயங்கிழையணிந்து மெல்லியன்மகளிர் எழினலந் சிறப்பு... நல்குவன்பலவே'' என்பதினால் பொன்னுபரங் கள் பலவற்றை மகளிராகிய விறலியர்களுக்கு வழங்கி ஞன் என்பதும் அவரது

- அமரர் பண்டிதமணி அருளம்பலவனர் -

கொடைத்திறன் மிக்க சிறப் பினைக் காட்டுகிறது.

ஆடுகோட்பாட்டுச் சேர லாதன் என்றும் மன்னனின் கொடைத்திறத்தால் நாட் டில் இரவலர் பலர் இலரா யினர். எனவே இரவலரைப் பெறும் பொருட்டு பிறநாட் டுக்குத் தன் தேரைப்போக்கி அதிலே இரவலர்களை வரப் பண்ணி வேண்டும் பொருள் களைக் குறைவின்றி நல்கி

''தமிழும் தமிழ்மக்களும் உள்ளவரைநினைவிருக்கும்''

காலமும் இடமும் பண் டிதமணி அருளம்பலவனு ரைக் காண உதவவில்லையே யன்றி அவர்களைக் கேட்ட றியவும், அவர்தம் நூல்கள் வாயிலாகக் கண்டறியவும் தடைசெய்யவில்லை.

தமிழ் ஞானப் பெருமலை யாய் அவர்கள் திகழ்ந்தமை யினை அவர்தம் நூல்கள் தமிழ்கூறும் நல்லுலகிற்கு உணர்த்திக் கொண்டேயிருக் கும். கபிலரை, பரணரை மற்றை சங்கச்சான்றோர்களை யான் காணவில்லை. பரிமே லழகர், பேராசிரியர் அடி யார்க்கு நல்லார் போன்ற தமிழ்ச் சான்றோர்களையும் காணவில்லை. அதைத் போலவே பண்டிதமணி அரு ளம்பலவனுரையும் நான் நேரில் காணவில்லை. அவர் தம் புலமைத் திறத்தால் அடியார்க்கு நல்லார் போன்ற அருந்தமிழ்ச் சான் றோர் வரிசையில் இடம் பெற்று. சரவிளக்குத்தொட ர்ச்சியில் ஓர் ஒளிவிளக்காய் திகழ்கின்றார். தமிழும் தமிழ்மக்களும் உள்ளவரை அரு ளம்பலவனுரைவர்கட்கு ஒரு தனிச் சிறப்பான இட முண்டு.

தங்கள் வீடும் நாடும் அறிந்த அளவில் புலமை ஒளி வீசி விளங்கிய அவர் கள் இன்று தமிழ்கூறும் நல் லுலகம் முழுவதும் சுடர் விட்டு விளக்குவதோடு, தெண்ணிலாமலர்ந்த வேணி யணித் தினம் தினைந்த இயல் பால். அப்பெருமானுடைய அணித்தெலும்பு உள்நெகச் செய்யும் ஆனந்தமாக்கருணை வெள்ளத்தில் திளைப்பார் என நினைந்து ஆறுதல் கொள்ளவேண்டும். கொள் வீராக.

அவர்தம் தமிழ்வாழ்வு புலவர்பாடும் பொற்புடை யது. காவியம்பாடும் கவி னுடையது. அது அம்பலத் தடியான் அருளமைதியில் நிறைவு பெறுவதாக.

— வித்துவான்
அ. மா. பரிமணம்.
எம். ஏ. எம். லிட்.

ஐயாறன் எழுதுவது

எழுபத்தைந்து வயதான ஒரு தமிழ் மூதாட்டி. கூன் முதுகு. திருநீற்றுப் பொலி வான முகம். சுறுசுறுப்பு. நடேசப் பெருமான் கோயில் கொண்ட நெஞ்சம். அவரையே நினைந்துநினைந்து கண்ணீர் விடுகிறார் தன் உடல், பொருள், ஆவியெல் லாம் அவருக்கே அர்ப் பணித்து பற்றற்றுவாழும் இந்தச்செம்மனச் செல்வி யார் தெரியுமா? கொக்கு வில் ஆச்சியார், எனும் திருமதி பண்டிதர் சோமஸ் கந்தர், அமிர்தவல்லி அம்மை.

கொக்குவில் மாத்தனைக் கந்தசாமி கோயிலில் புதிய மண்டபம் கட்டி, ஸ்ரீ நட ராஜப் பெருமானை பிர திட்டை செய்து இருவாரங் களில் கும்பாபிஷேகமாம். தான் சேமித்துவைத்திருந்த பொருளெல்லாம் கொண்டு இத்திருப்பணியையும் கும் பாபிஷேகத்தையும் இம் மூதாட்டியாரே செய்வ தாகத் தெரிகிறது. இளவய தில் கணவனுரை இழந்து, துறவு மனத்துடன் வாழ்ந்து வரும் இவ்வம்மைக்குத் தான் எவ்வளவு பக்தி! கோவிலுக்கு வந்து பார்க்க வேண்டுமென்று அன்புடன் அழைத்துச் சென்றார்.

பல ஒழுங்கைகளைக் கடந்து அமைதியான சூழ் நிலையிலே அமைந்துள்ளது இக்கோயில். மா, நெல்லி, அரசு, தென்னை முதலிய பல பல மரங்கள் சூழ்ந்த அழகான இயற்கைக்காட்சி யினிடையே, கோயில் கொண்டிருக்கிறான் முருகப் பெருமான். நமது பெரி யோர்கள் முருகனுக்குக் கோயில் கட்ட, எப்படி அழ கான இடங்களைத் தெரிவு செய்கிறார்கள்!

கோயிலை சுத்தமாக வைத் திருக்கிறார்கள். குருக்கள் அன்புடன் வரவேற்று, தீபாராதனை செய்தார். பல வருடங்களுக்கு முன் ஒரு புளியமரத்தடியிலிருந்த இம் முருகப்பெருமானுக்கு அவ்வூர் மக்கள் சேர்ந்து கோயில் கட்டியிருக்கிறார் கள். எவ்வளவு தாய்மார் செய்துள்ள தியாகமோ! கொடி மரம் அமைத்து இருவருடங்களாகத் திரு விழா நடக்கிறதாம். மனக் கவலையெல்லாம் மறந்து ஒருமையுடன் அவரது திரு வடி மலரை நினைக்கவசதி யான இடம்.

அந்த ஆச்சியாரின் இப் போதைய கவலை என்ன தெரியுமா? ஒரு நல்ல சாமரத்துடன் கூடிய சோடசோபசாரம், ஒரு

இத்தமிழ்த்தாயின் தூய் மையான இந்த விருப் பத்தை, கருணை மிக்க அந்த முருகன் நிறைவேற்றி வைப்பான் என்பதில் ஐய மில்லை.

0 0 0

பெற்றோர் செய்த பாவம் குழந்தைகளைத் தாக்குமா? மாதா பிதா செய்தது மக் கள் தலையிலே என்ற முது மொழி சரியா? என்று ஓர் அன்பர் வந்துகேட்டார்.

அச்சமயம் சுவாமி சர்வானந்தா அவர்கள் பகவத் கீதையைப் பற்றி எழுதியுள்ள ஓர் ஆங்கில விரிவுரை நூலைப்படித்துக் கொண்டிருந்தேன்.

இலங்கையிலே ஸ்ரீ ராம கிருஷ்ணமிஷன் ஆரம்பிக்க வும், விவேகானந்தசபையில் ஏற்பட்டிருந்த ஒரு வேற்று மையைத் தீர்த்தும் உதவிய பெரியார் சுவாமி சர்வா னந்தா அவர்கள். சிம்லா விலே அவர் கீதையைப் பற்றி ஆங்கிலத்தில் பேசிய வற்றை 36 வருடங்களுக்கு முன் புத்தகமாக வெளியிட் டிருந்ததை இப்போது அன் பர் ஒருவர் டி. ஏ. குமார சுவாமி அவர்கள் மறுபிர சுரம் செய்திருக்கிறார். 105/1 பலாலிரோடு, யாழ்ப் பாணம் ஏனும் விலாசத் துக்கு எழுதிப்பெறலாம். ஒரு கிறிஸ்தவர் அதைப் படித்துவிட்டுப் பெரிதும் பாராட்டி எழுதியுள்ளார். அதைத் தமிழிலும், சிங் களத்திலும்கூட மொழி பெயர்த்து வெளியிடுவது பயனுள்ளதாக இருக்கும். (அன்பர் அம்பிகைபாகன் இந்நூலுக்கு நல்லதோர் முகவுரை எழுதியிருக்கிறார் கள்.)

ஒருவர் செய்த பாவம், பிறரைத் தாக்காதென்றும், அப்படித் தாக்குவதாயின் அந்தச்சட்டம் சரியாகா தென்றும், அவரவர் செய்த வினையைத்தான் அவரவர் களே அனுபவிக்கவேண்டு மென்றும் சுவாமி அந்நூலில் விளக்குகின்றார்.

ஆனல் பெற்றோருக்குத் துன்பம் வரும்போது, அது குழந்தைகளையும் பாதிக்கி றது தானே! குழந்தைகள் நன்முக இருக்க, பெற்றோர் மிக மிக கவனமாக இருக்க வேண்டியதவசியமாகின்ற தல்லவா?

0 0

பற்றி நின்ற பாவங்கள் பாற்றவேண்டில் பரகதிக் குச் செல்வதொரு பரிசு வேண்டில், சுற்றிநின்ற சூழ் வினைகள் வீழ்த்தவேண்டில் சொல்லுகேன் கேள்நெஞ்சே துஞ்சாவண்ணம், உற்ற

குடியுரிமை வழங்குவதில் இலங்கை அரசாங்கம் அசிரத்தை

சாஸ்திரி—சிறிமா ஒப்பந்தம் பயனளிக்காது போகும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

என்ற பட்டியலில் இலங்கையும் சேரவேண்டிய நிலை ஏற்படலாம்

ஆசிரியருக்கு கடிதம்

குறைகள் நீக்கப்படுமா?

திருநெல்வேலிச் சந்தியில், இந்து வாலிபர் சங்கத்தினரின் ஆதரவில் நடைபெறும் வாசிகசாலையில் உள்ள குறைகளை தங்கள் மேலான பத்திரிகை மூலம் எடுத்துக்கூற விரும்புகிறேன்.

இவ்வாசிகசாலையில் இப்பொழுது ஒழுங்காக பத்திரிகைகளும், புத்தகங்களும் வருவதில்லை. மேலும் இவ்வாசிகசாலையில் எத்தனையோ நாடகங்கள், நடனங்கள் போன்ற கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன, இப்பொழுது இவை ஒன்றும் நடைபெறுவதில்லை. மற்றும் இவ்வாசிகசாலையின் கட்டிடம் வருடக் கணக்காக பூர்த்தியாகாமல் இருக்கிறது அதைப்பூர்த்தி செய்யாமல் இருப்பது பெரும் வேதனைக்குரிய விஷயமாகும். எனவே காலந்தாழ்த்தாது இக்குறைகளையெல்லாம் அவ்வாசிகசாலை நிர்வாகிகள் நீக்கி வைப்பார்கள் என நம்புகிறேன்.

பொதுநல்விரும்பி.

புகார்

மட்டக்களப்பு, திங்கள்

இங்குள்ள வைத்தியசாலையில் புதிதாகப் பிறக்கும் குழந்தைகளின் பெயர் பெரும்பாலும் தவருகப் பதிவுசெய்யப்படுவதாகப் பொதுமக்கள் புகார் தெரிவிக்கின்றனர். சில வேளைகளில் தாயின் பெயரோ தந்தையின் பெயரோ விடுபடுகிறது எனவும் இதனால் இப்பிள்ளைகளுக்குப் பின்னர் பங்கிட்டுப் புத்தகம் பெறுதல் பாடசாலையில் அனுமதி பெறுதல் ஆகியன கஷ்டமாகவிருக்கும் என அவர்கள் வருத்தம் தெரிவிக்கின்றனர், சமீபத்தில் நடந்த மட்டக்களப்பு மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டத்தில் இதுபற்றி பட்டிருப்பு ஆட்சிமன்ற அங்கத்தவர் திரு. எஸ். எம். இராசமாணிக்கம் தெரிவித்துள்ளார். இனிமேல் இது போன்ற தவறுகள் நேராவண்ணம் தான் கவனிப்பதாக சௌக்கிய சேவை அதிபர், திரு. இராசமாணிக்கத்திடம் தெரிவித்தார்.

இப்பத்திரிகை. சுழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு மாதம் 20-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்கம் அரசுத்தை

சாஸ்திரி—சிறிமா ஒப்பந்தம் பயனளிக்காது போகும்

தமிழரசுக் கட்சி, தமிழ்க காங்கிரஸ் இரண்டையும் தவிர இலங்கைப் பாராளுமன்றத்தில் உள்ள மற்றக் கட்சியினர் எல்லாம் சிங்களவர்களால்நடத்தப்படுபவைகளே. அந்தக் கட்சிகளிடையே மோதல் ஏற்பட்டால்—அதாவது சிங்களவர்களால் நடத்தப்படும்எதிர்க் கட்சிகளில் ஒன்று ஆளுங்கட்சியாகஉள்ள சிங்களவர் கட்சிமீது நம்பிக்கைஇன்மை தெரிவிக்குமாஞல்அந்த நிலையில் தமிழர் கட்சிகளின் கடமை என்ன? தமிழினத்தின் நலனேமட்டுமே நினைவில்கொண்டு அந்தக்கட்சிகள் நடந்துகொள்ளவேண்டும்.

இலங்கைத் தமிழர்நிலை

தேசியக்கட்சிகளாகும். யாருடன் சேருவது தமிழர் நலத்துக்கு நன்மையோ அவர்களுடன் சேருவதுதான் தமிழர் கட்சியின் அரசியல். இதனை பிற்போக்குத்தனம் 'சந்தர்ப்ப வாதம்' என்றெல்லாம் தங்களுக்குத்தாங்களே முற்போக்கு முத்திரை போட்டுக் கொண்டிருப்பவர்கள் சொல்லலாம். அதற்காக பயந்து போகத்தேவையில்லை.

இலங்கையிலே தமிழ் பேசும் மக்கள் எலாம்-சிங்களவர் ஆதிக்கத்தின் 'கீழ் பிற்போக்கான நிலையில் தான்வைக்கப்பட்டுள்ளனர். ஆகவே, அரசியலிலும் தங்கள் நிலைக்கேற்பத்தான் அவர்கள் நடந்துகொள்ள முடியும். அதுதான்அவர்கள் அகராதியில் நீதி. நியதி;

இந்த முறை இலங்கை சுற்றுலாவின்போது நான்தோட்டப் பிரதேசங்களில் சுற்றுலாச் செய்யவில்லை. இதனால் இலங்கை தோட்டத்தொழிலாளர்களோடு தொடர்புகொள்ளமுடியவில்லை. இலங்கை தோட்டத்தொழிலாளர்களின் தலைவர்களில் ஒருவரான என் அருமை நண்பர் திரு. அஸீஸ் அவர்களை சந்தித்துப்பேச முடிந்தது. அவர் மூலம் தோட்டத் தொழிலாளர்களான இந்தியர்களின் தற்போதைய நிலையை அறிந்தேன். தோட்டத் தொழிலாளர்களிலே மிகப்பெரும்பான்மையோரின் தலைவராக விளங்கும் திரு. தொண்டமான் அவர்களையும் சந்தித்துப்பேச விரும்பினேன். அவர் கிடைக்கவில்லை.

இலங்கை-இந்திய ஒப்பந்த அமுல்

மொத்தத்தில் இலங்கையில்உள்ள தோட்டத்தொழிலாளர்களான இந்தியர்களின் நிலைமை திருப்திகரமாக இல்லை என்பதனை அறிந்தேன். சாஸ்திரி—சிறிமா ஒப்பந்தம் ஒரு தலைப்பட்சமாக அமுல்நடத்தப்படலாமென்ற ஐயம் இருந்துவருகிறது.

இலங்கையிலிருந்து வெளியேறி இந்தியாவுக்குத் திரும்பவிடுப்பவர்களுக்குக் குடியுரிமைவழங்குவதிலே இலங்கையில் உள்ள இந்தியத் தூதர் ஒப்பந்தப்படி நடந்துகொண்டுவருகிறார். இதுவரை 35 ஆயிரம் பேருக்கு குடியுரிமை வழங்கியிருக்கிறோம். ஆனல், இலங்கையிலேயே தங்கி, வாழ வேண்டியவர்களுக்கு குடியுரிமை வழங்குவதிலே இலங்கை அரசு போதிய அக்கறை காட்டுவதாகக் காணேம். இந்தநிலை நீடிக்கவிட்டால் சாஸ்திரி—சிறிமா ஒப்பந்தத்தாலும் இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழியினருக்கு பிரச்னை தீராமல் போய்விடும். இதுவிஷயத்தில் கொழும்பிலிருந்தபோது நான் அறிந்துகொண்டவற்றை இந்தியப் பிரதமருக்கு எழுதப்போகிறேன். சாஸ்திரி-பண்டார நாயகா ஒப்பந்தத்தை நேர்மையாக அமுல் நடத்துவதற்கு எனக்குத் தோன்றும் கருத்துக்களையும் இந்தியப் பிரதமருக்கு தெரிவிக்கப்போகிறேன்.

நாடுபிடிக்க வருவதாக எழுதிய பத்திரிகை

நான்இலங்கை சென்றதை யொட்டி அங்குள்ள சிங்களவர் நடத்தும் ஆங்கில-சிங்கள மொழிப் பத்திரிகைகளில் சில கலவரம்அடைந்தன. நான் நாடுபிடிக்க வருவதாகக்கூட செல்வாக்குள்ள ஆங்கிலப் பத்திரிகை எழுதியிருந்தது. அரசாங்க ஆதரவாளர்களால்நடத்தப்படும் ஒன்றிரு தமிழ் ஏடுகள் கூட என் விஷயத்தில் நியாயமாக நடந்துகொள்ளவில்லை.

இலங்கை அரசியலில், தலையிடக் கூடாதென்று நான் கொண்டிருந்த விரதம் அச்சத்தை ஒட்டியதன்று. அரசியல் தந்திரமுமல்ல அது என்வாழ்க்கையில் நான் கடைப்பிடித்துவரும் அரசியல் ஒழுக்கத்தின் ஒரு அம்சமாகும். கடந்த முறைகளில் நான் சென்றிருந்தபோது கூட இந்த ஒழுக்கத்தை நான் உறுதியாக கடைப்பிடித்திருக்கிறேன்.

அப்போதெல்லாம் என் வருகைபற்றி கலவரமடையாத சிங்களவர் ஏடுகள், இந்தமுறை கலவரமடையக்காரணமுண்டு. அது இப்போது நான் தி. மு. க.வை ஆதரிக்கும் அரசியல் வாதியாக இருப்பதுதான். "தி. மு. க. தலைவர்" என்னும் தலைப்புக்கொடுத்தே என் சம்பந்தப்பட்ட செய்திகளை அல்லது கண்டனங்களை வெளியிட்டிருந்தன சிங்கள

— ம. பொ. சிவஞான கிராமணியார் —

வர் ஏடுகள். இலங்கை அரசாங்க வட்டாரத்தில் என் வருகைபற்றி கலவரம் எதுவும் காணப்படவில்லை நான் இலங்கைப் பிரதமரை சந்தித்துப் பேசவேண்டுமென்றும் எண்ணியிருந்தேன். நான் கொழும்பில் தங்கியிருந்த நாட்களிலே அவர் நுவரேலியாவில் இருந்தார். அத்துடன் சிங்கள சகோதரர்கள் புத்தாண்டு கொண்டாடும் நாட்களிலே நான் கொழும்பில் தங்கினேன். அதனல் வேறு அமைச்சர்களிலே எவரையும் கூடக் காணவில்லை. இன்னும் ஒன்றிரு நாட்கள் கொழும்பில் நான் தங்கினல், பிரதமர் டட்லி சேனநாயகாவைச் சந்திக்க ஏற்பாடு செய்து தருவதாக நண்பர்கள் கடைசி நேரத்தில் கூறினர்கள். திட்டமிட்டபடி நான் தாயகம் திரும்பியாகவேண்டிய சட்டாயம் ஏற்பட்டதால், அது சாத்தியமில்லாமற் போய்விட்டது.

இலங்கை பூர்வகுடி தமிழர்பற்றியும், இந்தியவம்சாவழியினர் பற்றியும் என் கருத்துக்களை இலங்கைப் பிரதமருக்கு எழுதலாமென்றிருக்கிறேன். (தொடரும்)

புனித சவேரியார் திருநாள்

யாழ்ப்பாணம். செவ்வாய்

புங்குடுதீவு புனித சவேரியார் திருநாள் இன்று காலை நடை பெறவுள்ளது. பெரிய பாடல் பூசையைத் தொடர்ந்து நடை பெறும் திருச் சொரூப சுற்றுப் பிரகாரத்துடன் திருநாள் முடிவடையும்.

ஒருமையுடன் அவரது திருவடி மலரை நினைக்கவசதியான இடம்.

அந்த ஆச்சியாரின் இப்போதைய கவலை என்ன தெரியுமா? ஒரு நல்ல சாமரத்துடன் கூடிய சோடசோபசாரம், ஒரு பெரியகுடை, நடராஜப் பெருமானின் படத்துடன் கூடிய திரைச்சீலை. இவற்றைச் சேர்க்கவேண்டுமென்பதுடன், கும்பாபிஷேகம் தடையின்றி நன்கு நடைபெறவேண்டுமென்பதுதான்.

தல்லவா?

0 0

பற்றி நின்ற பாவங்கள் பாற்றவேண்டில் பரகதிக்குச் செல்வதொரு பரிசு வேண்டில், சுற்றிநின்ற சூழ் வினைகள் வீழ்த்தவேண்டில் சொல்லுகேன் கேள்நெஞ்சே துஞ்சாவண்ணம், உற்ற வரும் உறுதுணையும் நீயே யென்றும் உன்னையல்லால் ஒரு தெய்வம் உள்கே னென்றும் புற்றரவச்சார்த்த புனிதாவென்றும் பொழு லா ரூ ரா வென் றே போற்றுநில்லே.

— அப்பர் அடிகள்.

கும்பழாவளை பிள்ளையார் கோவில்

பரிபாலகர்-பொலிஸ் அதிபர் இன்று சந்திப்பு

யாழ்ப்பாணம், செவ். அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோவில் ஆலயப்பிரவேசம் சம்பந்தமாக மேற்படி ஆலய பரிபாலகர்களை வடபகுதி பொலிஸ் சுப்பிரிண்டன்ட் இன்று சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தவிருக்கின்றார்.

மேற்படி கோவில் வருடாந்த மஹோற்சவம் நாளை நடைபெறும் கொடியேற்று வைபவத்துடன் ஆரம்பமாகின்றது.

திருவிழாவின் போது தம்மை அமைதியானமுறையில் ஆலயப்பிரவேசம் செய்ய அனுமதிக்கும்படி அளவெட்டி சிறுபான்மைத் தமிழர்கள் வடபகுதி பொலிஸ் சுப்பிரிண்டனுக்கும், கோவில் பரிபாலகர்களுக்கும் தெரிவித்ததைத் தொடர்ந்தே பொலிஸ் சுப்பிரிண்டன்ட் திரு. ஆர். சுந்தரலிங்கம் இந்தப் பேச்சுவார்த்தையை இன்று மேற்கொள்கின்றார்.

இப் பேச்சுவார்த்தை மூலம் ஆலயப்பிரவேசத்தில் சுமுகமான நிலையை உருவாக்கலாம் என்று பொலிசார் எதிர்பார்க்கின்றனர்.

(கா. நி.)

யாழ். கனிட்ட தொழில்நுட்ப நிலையத்தின்

அழைப்பு

22-5-69 வியாழன் மாலை 5 மணிக்கு நடைபெறவிருக்கும் யாழ்.கனிட்ட தொழில்நுட்ப நிலைய 10ஆவது ஆண்டு நிறைவு விழாவுக்கு பழைய மாணவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம். சிறப்பு விருந்தினராகக் கலாநிதி எஸ். எல். டீ. சில்வாவும் பாரியாரும் கலந்து கொள்வார்கள்

மாணவர் மன்றம்
1579

மரண அறிவித்தல்

இராசம்மாள் இராமநாதன்

காலஞ் சென்ற வண்ணை வி. இராமநாதன் அவர்களின் மனைவியும் கோலாலம்பூரைச் சேர்ந்த செந்திராஜா, சைவ மங்கையர் வித்தியாலய உப அதிபர் செந்திச் செல்வம், 'ஈழநாடு' நிறுவனத்தைச் சேர்ந்த, முன்னைய இலங்கை வானெலி அறிவிப்பாளருமான திரு மதி செந்தில்மணியில்வாகனம் ஆகியோரின் தாயார் 19-ம் திகதி அதிகாலை இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் பூதவுடல் இன்று (20-ம் திகதி) 4-30-க்கு வெள்ளவத்தை டயா வீதி, 7-ம் இலக்கத்திலிருந்து கனத்தை மயானத்துக்கு ஈமக்கிரியைக்கு எடுத்துச் செல்லப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org